வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 03.04.2024 புதன்கிழமை இதழ் : 94 பக்கங்கள் : 12

திருச்சி முகாமிலிருந்து விடுதலை

# முருகன், பயஸ், ஜெயக்குமார் இன்று தாயகம் வருகின்றனர்!

## பலாலி ஊடாக திரும்ப அனுமதி மறுப்பு



சென்னை, ஏப்ரல் 03

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் இன்று வியாழக்கிழமை இலங்கை வருகின்றனர்.

மூவரும் பலாலி விமான நிலையம் ஊடாக நாடு திரும்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாகவே நாடு திரும்புகின்றனர்.

முற்பகல் 10 மணிக்கு சென்னை விமானம் நிலையத்துக்கு அழைத்து வரப்படும் இவர்கள், விமானம் மூலமாக முற்பகல் 11.30 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைவார்கள்.

இந்தத் தகவல்களை முருகன் சார்பில் வழக்காடிய சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலையான இலங்கையர்கள் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். இவர்களில், சாந்தன் கடந்த பெப்ரவரி 11

## பொருளாதாரம் வலு; வறுமை அதிகரிப்பு!

இலங்கை குறித்து உலகவங்கி

கொழும்பு, ஏப். 03

இலங்கையின் பொருளாதாரம் நடப்பு ஆண்டில் உறுதியாகியுள்ளது. 2.2 வீத மிதமான வளர்ச்சியை காட்டுகிறது. எனினும், நாட்டில் இன்னும் உயர் வறுமை, வருமான சமத்துவமின்மை மற்றும் தொழிலாளர் சார்ந்த பிரச்னைகள் காணப்படுகின்றன.

- இவ்வாறு இலங்கை, மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகளுக்கான உலக வங்கியின் 11

## அநுரவுடன் விவாதத்துக்கு வருக சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு

தேசிய மக்கள் சக்தி விடுத்தது

கொழும்பு, ஏப். 03

அநுரகுமார திஸநாயக்கவுடன் பொருளாதார கொள்கைகள் தொடர்பான பகிரங்க விவாதத்துக்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தேசிய மக்கள் சக்தி நேற்று அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சுனில் ஹந்துன்நெத்தி இதனை தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி 11

## வடக்கு,கிழக்கில் இன்று முதல் வெப்ப நிலை மிக உச்சத்தில்!

யாழ்ப்பாணம், ஏப். 03

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் இன்று முதல் வெப்ப நிலை மேலும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கரையோரப் பகுதிகளில் ஓரளவு வெப்பம் குறைவாக காணப்பட்டாலும் உள்நிலப் பகுதிகளில் வெப்பநிலை மிக உயர்வாக காணப்படும். 11

## உறுப்பினரின்றி ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம்!

கொழும்பு, ஏப். 03

வங்கித் திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்ட ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் இல்லாததால் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபை நடவடிக்கைகளை சுமார் இரண்டரை 11

## கல்முனை பிரதேச செயலக பிரச்னைக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் காரணமல்லர்

தமிழ் தரப்புகளை சாடுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, ஏப். 03

கல்முனை பிரதேச செயலக பிரச்னைக்கு முஸ்லிம் அரசியல் தலைமைகளோ முஸ்லிம் எம்.பி.க்களோ காரணமல்ல என்று கூறியுள்ளார் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எச். எம். எம். ஹரீஸ் எம். பி.

அத்துடன், வடக்கு, கிழக்கில் தமிழ் - முஸ்லிம் இனங்கள் அரசியல் தீர்வை - அதிகாரப் பகிர்வை வேண்டி நிற்கின்றனர். இந்த நிலையில், கல்முனை மாநகரத்தில் வெறுமனே ஒரு வட்டாரத்தில் 3,500 தமிழ் மக்கள் முஸ்லிம்களோடு இணைந்து வாழ்வதற்கு தமிழ் தலைமைகள் இடமளிக்காத நிலையில், வடக்கு - கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக அதிகாரப் பகிர்வை எவ்வாறு 11

## அறகலய தொடர்பில் தெரிவு குழு அமைக்குக

விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, ஏப். 03

'அறகலய' இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நாட்டின் இறையாண்மைக்கு எதிராக செயல்பட்ட தேசிய மற்றும் சர்வதேச தரப்பினர் குறித்து விசாரணைகளை மேற் கொள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என தேசிய சுதந்திர 11




## வடக்கு மருத்துவமனைகளில் நேற்று பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஏப். 03

வடக்கு மாகாணத்தின் மருத்துவமனைகளை சேர்ந்த தொழிற்சங்கங்கள் நேற்று 4 மணிநேரம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர். இதனால், பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முல்லைத் தீவு, வவுனியா பொது மருத்துவமனைகளில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சுகாதார ஊழியர் கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால், மருத்துவமனைக்கு சிகிச்சை பெற 11

## வெடுக்குநாறிமலை விவகாரம் சபையில் விவரித்த கஜேந்திரன்

கொழும்பு, ஏப். 03

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரால் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சிறப்புரிமை பிரச்னை ஒன்றை முன்வைத் தார்.

இதன்போது, கருத்துரைத்த அவர்,

"மஹா சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளில் 11

## உள்ளகக் குறைபாடுகளே அறகலயவுக்கு காரணம்!

சபாநாயகர் மகிந்த

கொழும்பு, ஏப். 03

உள்ளக மட்டத்தில் குறைபாடுகளுடன் செயல்படும் போது பிற தரப்பினர் தலையிடுவார்கள். அறகலயவில் ஆரம்பத்தில் இருந்து அவ்வாறான தன்மையே காணப்பட்டது. நாட்டின் இறையாண்மைக்கு வெளித்தரப்பினர் அச்சுறுத்தல் விடுத்ததாக நான் 11

வற் வரி 18%

## 36 மேலதிக வாக்குகளால் திருத்தம் நிறைவேறியது

கொழும்பு, ஏப். 03

15 வீதமாகவுள்ள பெறுமதி சேர் வரி (வற்) 18 வீதமாக அதிகரிக்கும் பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழான கட்டளை நேற்று பாராளுமன்றில் நிறைவேறியது. 36 மேலதிக வாக்குகளால் இந்த சட்ட திருத்தம் நிறைவேற்றப்பட்டது. 11

# இப்படியும் நடக்கிறது

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையிலான கூட்டணி விரைவில் அறிவிக்கப்படும் என்று சில நாட்களாக கூறப்பட்டு வருகின்றது.

அந்தக் கூட்டணியில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி ஏற்கனவே கையெழுத்திட்டு விட்டதாக ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அது தமது சமூகத்தின் சார்பில் அரசியல் கட்சிகளுடன் செய்துகொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கும் சமூக ஒப்பந்தமே தவிர, அது அரசியல் ஒப்பந்தம் அல்ல என்று மனோ கணேசன் விளக்கமளித்திருக்கிறார்.

அப்படியெனில் விரைவில் அறிவிக்கப்படவிருக்கும் கூட்டணியில் யார் யாரெல்லாம் இருக்கிறர்கள் என்பது தெரியவில்லை. கடைசியாகக் கட்சியின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் இணையவிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீனோ ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் இன்னமும் தமது கட்சி முடிவு எதனையும் எடுக்கவில்லை என்கிறார்.

“ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான பின்னர் தமது கட்சியின் உயர்பீடம் ஒன்றுகூடி யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் முடிவெடுப்போம்” என ரிஷாத் பதியுதீன் தெரிவித்திருக்கிறார். அதாவது, தாம் இப்போது ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து முடிவெடுக்கவில்லை என்பது அந்தக் கூட்டணியே வேறு ஒரு வேட்பாளரை ஆதரிக்கின்ற முடிவுக்கு வரலாம் என்கிறாரா என்பது தெரியவில்லை. ஆனால், அவர்களைப் பொறுத்தவரை தோல்வியடையக்கூடிய ஒரு வேட்பாளரை ஆதரித்துவிட்டு மீண்டும் ஒரு ஐந்து வருடங்கள் எதிர்க்கட்சியில் அமரமுடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அதேநிலையில்தான் மனோ கணேசனும் இருக்கிறார். ரவூப் ஹக்கீமும் இருக்கறார் என்பதையும் நாம் புரிந்துகொள்ளலாம். ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான பலமே சிறுபான்மை கட்சிகள் அவர்களோடு இருக்கிறார்கள் என்பதுதான். ஆனால், அவர்களுக்கும் இன்றைய நிலையில் சஜித் வெற்றிபெறுவாரா என்ற சந்தேகம் இருப்பதாகவே தெரிகின்றது. அதனால்தான் சஜித் தரப்பையும் ரணில் தரப்பையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் அவர்களும் மறைமுகமாகப் பின்னால் இருக்கிறார்கள். அவ்வாறு இருவரும் இணைகின்றபோது மகிந்த தரப்பின் ஆதரவு ரணிலுக்கு தேவைப்படாது என்று நம்புகின்ற அவர்கள், மகிந்த தரப்பு இல்லாத ரணிலுடன் இணைந்து பணியாற்றுவதில் தமக்கு சிக்கல் இருக்காது என்றும் நம்புவதாகத் தெரிகின்றது.

அதனால்தான் சஜித் தரப்பையும் ரணில் தரப்பையும் ஒன்றிணைப்பதன் மூலம் தமது அணியின் வெற்றியை உறுதிசெய்துகொள்ள முனைவதாகவும் அதற்காக அனைத்து வழிகளிலும் கடுமையாக உழைப்பதாகவும் அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யார் ஆட்சிக்கு வந்தாலும் அந்த அரசாங்கங்களுடன் இணைந்து அரசியல் செய்து வந்த சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரசும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் ஐந்து ஆண்டுகள் எதிரணியில் இருந்துவருகின்றன. அடுத்த தேர்தலில் மும்முனைப் போட்டி இடம்பெறும் என்றால் யார் வெற்றிபெறுவார் என்பதை கணிப்பது சற்றுக் கடினமானதாக இருக்கலாம் என்பதாலேயே மீண்டும் ஒருதடவை பரீட்சித்துப் பார்க்கின்ற வேலையைச் செய்யாமல் நிச்சயம் வெற்றிபெறக்கூடிய அணி ஒன்றை உருவாக்கி அந்த அணியில் இடம்பெறவேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக இருப்பது ஒன்றும் ஆய்வுக்குரிய விசயமல்லவே.

அதனால்தான், “தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்தே கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டோம். அதனை தொடர்ந்து தற்போது வரை அதே கூட்டணியில் பயணித்து வருகின்றோம். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுகின்றபோது எமது கட்சியின் உயர்பீடம் தேர்தலில் எந்த வேட்பாளரைத் தெரிவு செய்வது என்பது தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் - என்கிறார் ரிஷாத் பதியுதீன்.

ஆக, ஐக்கிய மக்கள் சக்தியும் தனது கூட்டணியை அறிவிப்பதில் காத்திருக்கத்தான் வேண்டியிருக்கின்றது. சிலவேளை அதற்கு முன்னதாக தனது அணியில் இணைந்துள்ள பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சில முன்னாள் படைத் தளபதிகளுடன் இணைந்து கூட்டணியை அறிவிக்கலாம்.!

**- ஊர்க்குருவி.**

# தேராவில் காட்டு யானைகளால் ஏற்படும் அழிவுகள் அதிகரிப்பு!

முல்லைத்தீவு, ஏப். 03

தேராவில் கிராமத்தில் காட்டு யானைகளால் ஏற்படும் அழிவு அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மாலை வேளையில் ஊர் மனைக்குள் வருகின்ற யானைகள் அதிகாலை வரை ஊரில் உள்ள பயன் தரும் மரங்கள், பயிர்கள் மற்றும் சொத்துகளை அழித்துச் செல்கின்றன என்றும் அவர்கள் கூறினர்.

தினமும் வரும் யானைகளால் அங்கு வாழும் தாங்கள் மிகுந்த அச்சத்துடனேயே வாழ வேண்டியுள்ளதோடு இதனால் தமது வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அந்தப் பகுதி



மக்கள் தெரிவித்தனர்.

யானை வேலி அமைப்பதாக பல தடவைகள் கூறப்பட்டாலும் இதுவரை அதற்கான எந்த விதமான தீர்க்கமான முடிவுகளும் எடுக்கப்படாமல் தாம் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

மேலும், இது விடயத்தில் அரசியல்வாதிகள், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

(ஐ)

# தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி 10 ஆயிரம் கையொப்பங்கள் சேகரிப்பு

கொழும்பு, ஏப். 03

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளையும் உரிமைகளையும் அரசு அங்கீகரித்து அதற்கான சட்டமூலம் ஊடாக தேவைகளை அமுல்படுத்த அரசை வலியுறுத்தும் வகையில் ஒரு வார காலத்துக்குள் 10 ஆயிரம் கையெழுத்துகளை திரட்டும் பணியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னெடுத்து வருகிறது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் இந்தப் பணியின் அறிமுக நிகழ்வு நேற்று புதன்கிழமை கொட்டகலை காங்கிரஸ் தொழில் நிறுவன வளாகத்தில் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்பரும் 10ஆம் திகதி வரை முழு மலையகத்திலும் கையொப்பம் சேகரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரசறிவியலாளன் இதழ் வெளியீடு!

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் ஒன்றியத்தின் அரசறிவியலாளன் - இதழ் 6 வெளியீட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அரசறிவியல்துறை தலைவர் சு. டிலக்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் சிறப்பு விருந்தினராகவும் அரசறிவியல்துறை தலைவர் பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம், அரசறிவியல்துறை விரிவுரையாளர்களான ந. தர்மினி, கு.ஸ்மியா கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# போதை மாத்திரைகளுடன் கட்டுநாயக்காவில் இருவர் கைது!

கொழும்பு, ஏப். 03

கட்டுநாயக்காவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது போதை மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 7 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, அதே பிரதேசத்தில் வைத்து 550 போதை மாத்திரைகளுடன் மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் கட்டுநாயக்க மற்றும் சீதுவை உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 19 மற்றும் 42 வயதுடையவர்களாவர். (ஐ)

# சோலை அம்மனுக்கு குளிர்த்தி உற்சவம்!

தென்மராட்சி, ஏப். 03

பிரசித்தி பெற்ற தென்மராட்சி மீசாலை சோலை அம்மனுக்கு மூன்றாவது பங்குனி உத்தர குளிர்த்தி உற்சவமும் நீர் சோறு வழங்கலும் நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கருவறையில் வீற்றிருக்கு சோலை அம்மனுக்கு சிறப்பு, அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று எம்பெருமாட்டி உள்வீதியுடாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பின்னர் பக்தர்களுக்கு நீர்ச்சோறு வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

கடந்த பங்குனி உத்தர குளிர்த்தி உற்சவம் கடந்த 18.03.2024 அன்று முதலாவது உற்சவத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் நான்காவது பங்குனி உத்தர குளிர்த்தி உற்சவத்துடன் நிறைவடையும். (ஐ)

# வறட்சியால் 9,866 பேர் குடிதண்ணீரின்றி பாதிப்பு

கொழும்பு, ஏப். 03

நிலவும் வறட்சியான கால நிலையால் குடிதண்ணீரின்றி 2 ஆயிரத்து 927 குடும்பங்களை சேர்ந்த 9ஆயிரத்து 866 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் கம்பஹா மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு, 2 ஆயிரத்து 351 குடும்பங்களை சேர்ந்த 7ஆயிரத்து 53 பேர் குடிதண்ணீரின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 576 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 813 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# மசாஜ் நிலையங்களில் 16 பெண்கள் கைது!

கொழும்பு, ஏப். 03

அநுராதபுரம் பிரதேசத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த மசாஜ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 4 பெண்களும் எச். ஐ. வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பது தொடர்பில் பரிசோதிக்க வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், மாத்தறை பிரதேசத்தில் உள்ள சட்டவிரோத மசாஜ் நிலையங்களில் பணிபுரியும் 12 பெண்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கைது செய்யப்பட்ட பெண்கள் காலி, கேகாலை, கொழும்பு , புத்தளம் மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
03.04.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்த் தலைவர்களின் அச்சம்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்னும் சிவில் சமூகக் கோரிக்கையைக் கண்டு கட்சிகளின் தலைவர்கள் அச்சமடைந்திருக்கின்றனர் என்றே தெரிகின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, தமிழ் பொது வேட்பாளர் விடயம் தங்களின் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிடுமோ என்னும் அச்சம் – அடுத்தது, ஒப்பீட்டடிப்படையில் தாங்கள் மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதை அனைவருமே உணர்ந்திருக்கின்றனர்.

இதன் காரணமாகவே, தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை தான் ஆதரிக்கவில்லை என்று சம்பந்தன் கூறியிருப்பதான செய்திகள் வெளியாகியிருந்தன. சம்பந்தன் கூறினாரென இவ்வாறானதொரு செய்தியை வெளியிடும்போது இந்த முயற்சிக்கு தமிழ்க் கட்சிகளிடையே ஆதரவில்லை என்னும் தோற்றத்தை உருவாக்கலாம் என்று சிலர் கணித்திருக்கலாம். அதேவேளை, ஒருபுறம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கொள்கையளவில் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கூறிவருகின்றபோதிலும்கூட மறுபுறம் தடுமாற்றமான கருத்துகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. இது கட்சிகள் மத்தியிலுள்ள தடுமாற்றத்தையே காண்பிக்கின்றது.

தமிழ் அரசு கட்சியின் உள் முரண்பாடுகளால் அந்தக் கட்சி பற்றிய கொழும்பு அபிப்பிராயம் பெருமளவுக்கு மாறிவிட்டது. இதுவரையில் சம்பந்தனோடும் சுமந்திரனோடும் பேசினால் போதும் என்னும் அபிப்பிராயமே சிங்கள பிரதான கட்சிகள் மத்தியிலிருந்தது. தற்போது அந்த நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. சுமந்திரனால் வடக்கு – கிழக்கில் தனித்து எதனையும் செய்ய முடியாது என்பதை அனைவருமே புரிந்துவிட்டனர். இன்றைய நிலையில், வடக்கு – கிழக்கிலுள்ள தமிழ் மக்களை கையாள்வதாயின் வெறுமனே ஒரு சில நபர்களுடன் பேசினால் மட்டும் போதுமானது என்னும் நிலைமையில் பெரிய உடைவு ஏற்பட்டுவிட்டது. இவ்வாறானதொரு சூழலில் தான் தமிழ் பொது வேட்பாளர் விடயம் பேசுபொருளாகியிருக்கின்றது.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் எந்தப் பின்புலத்திலிருந்து வெளிவருகின்றது? தென்னிலங்கை வேட்பாளர்கள் தொடர்பான சந்தேகங்களிலிருந்தும் அதிருப்தியிலிருந்துமே இந்த எண்ணக்கரு உருவாகியிருக்கின்றது. அதனை எவ்வாறு கையாளலாம் என்பதைத்தான் மக்கள் மனு சிவில் சமூகம் முன்வைத்துவருகின்றது.

ஆனால், மக்கள் மத்தியிலுள்ள அதிருப்தியானது தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கருவுக்கு சாதகமாகிவிடலாம் என்பதே கட்சித் தலைவர்களின் அச்சமாகும். இதன் காரணமாகவே கட்சிகளின் தலைவர்கள் விடயத்தை எவ்வாறு கையாள்வது என்று தெரியாமல் தடுமாறுகின்றனர். முழுமையாக அவர்களால் உடன்படவும் முடியவில்லை – அதேவேளை, தென்னிலங்கை வேட்பாளர்களை நம்புங்கள் என்று தமிழ் மக்களை நோக்கிப் பேசவும் முடியவில்லை.

தென்னிலங்கை வேட்பாளர்களை நம்புங்கள் என்று கூறுவதிலும் சிக்கல்கள் உண்டு. ஏனெனில், தமிழ் கட்சிகள் கடந்த காலத்தில் கைகாட்டிய எந்தவொரு வேட்பாளரும் தேர்தலுக்கு பின்னர் தமிழ் மக்கள் சார்பான விடயங்களுக்கு எதிர்பார்த்தவாறு முன்னுரிமை அளிக்கவில்லை. இந்த நிலையில், எவ்வாறு இன்னுமொரு வேட்பாளரை எந்த உடன்பாடுமின்றி ஆதரிக்க முடியும்? இந்தக் கேள்விக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எவரிடமும் பதில் இல்லை.

ஒருவேளை, தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை பெரியளவில் முன்கொண்டு சென்றால் என்ன செய்வது – இந்தக் கேள்வி அச்சுறுத்துதலாக மாறியிருக்கின்றது. இந்த அச்சத்தின் வெளிப்பாடுதான் சம்பந்தனின் வெளிப்பாடு. சம்பந்தன் தற்போதுள்ள நிலையில் இதுபற்றியெல்லாம் பேசக்கூடிய நிலையில் இல்லை என்பதை அனைவருமே அறிவர்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தைப் பார்த்து தமிழ் கட்சிகள் அச்சப்படுகின்றன என்பது மட்டும் உண்மை. இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கரு கவனத்தைப் பெற்றுவிட்டது. இது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் தங்களின் இருப்பு கேள்விக்கு உள்ளாகிவிடலாம் என்னும் நிலையிலேயே தமிழ் கட்சிகளின் தலைவர்கள் இருக்கின்றனர்.

## 9 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்த சதொச

*கொழும்பு, ஏப். 03*

லங்கா சதொச விற்பனை நிலையங்களில் 9 அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த விலை குறைப்பு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வந்தது.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 55 ரூபாயாலும் ஒரு கிலோ சின்ன வெங்காயம் 30 ரூபாயாலும் ஒரு கிலோ நிலக்கடலை 16 ரூபாயாலும் ஒரு கிலோ உருளைக் கிழங்கு 15 ரூபாயாலும் 400 கிராம் பால்மா 10 ரூபாயாலும் ஒரு கிலோ கோதுமை மா 8 ரூபாயாலும் ஒரு கிலோ பச்சரிசி 3 ரூபாயாலும் ஒரு கிலோ சோயா மீற் 2 ரூபாயாலும் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஒரு கிலோ பெரிய வெங்காயம் 495 ரூபாயாகவும் ஒரு கிலோ சின்ன வெங்காயம் 290 ரூபாயாகவும் ஒரு கிலோ நிலக்கடலை 494 ரூபாயாகவும் ஒரு கிலோ உருளைக் கிழங்கு 195 ரூபாயாகவும் 400 கிராம் பால்மா 925 ரூபாயாகவும் ஒரு கிலோ கோதுமை மா 192 ரூபாயாகவும் ஒரு கிலோ பச்சரிசி 192 ரூபாயாகவும் ஒரு கிலோ சோயா மீற் 593 ரூபாயாகவும் விற்பனையாகின்றன. (ஐ)

## மணலுடன் பிடிபட்டோருக்கு பிணை; வெடி கொளுத்திக் கொண்டாட்டம்!

*வடமராட்சி, ஏப். 03*

அம்பனில் மணல் அகழ்ந்தபோது கைதான ஆறு பேரை பருத்தித்துறை நீதிமன்றம் பிணையில் விடுவித்தது. இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் அம்பனில் வீடுகளின் முன்பாக வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அம்பனில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த 6 பேர் விசேட அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 6 டிராக்டர்களும் பிடிபட்டன. மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள் அன்றைய தினமே பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட ஆறு பேரும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டனர். உழவு இயந்திரங்களில் இருந்த மணல் மண் நீதிமன்றின் பொறுப்பில் எடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உழவு இயந்திரங்களும் விடுவிக்கப்பட்டன.

பிணையில் விடுவிக்கப்பட்ட அவர்கள் அம்பனில் வீடுகளின் முன்பாக வெடிகளை கொளுத்தித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர் என்று அறிய வருகின்றது.

(ஐ-02)

## முட்டையின் விலை ரூ.7ஆல் குறைந்தது

*கொழும்பு, ஏப். 03*

இறக்குமதி செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை லங்கா சதொச விற்பனை நிலையங்களில் 36 ரூபாயாகக் குறைவடைந்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் லங்கா சதொச விற்பனை நிலையங்களில் முட்டை ஒன்று 43 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டது.

இதன்படி, முட்டை ஒன்றின் விலை 7 ரூபாவால் குறைவடைந்துள்ளது. (ஐ)

## திருவிழா கால சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஏப். 03*

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதையொட்டி, ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தினமும் இரவு 8 மணிக்கு சிவநெறிப் பிரசாரகர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சொற்பொழிவு நடைபெறுகின்றது.

இதில், சைவப்புலவர்கள் செ. த. குமரன், பொன். சந்திரவேல், க. கயிலைநாதன், இளம் சைவப்புலவர்கள் ச. நவநீதன் த. மனோஜ்குமர் ஆகியோர் சொற்பொழிவாற்றி வருகின்றனர்.

## 2 ஆயிரம் தொன் உழுந்து இறக்குமதிக்கு அனுமதி!


*கொழும்பு, ஏப். 03*

2 ஆயிரம் மெற்றிக் தொன் உளுந்து இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பண்டிகைக் காலங்களில் உளுந்து தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கவும், விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும் விசேட பண்டவரி சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரிகளுக்கு உட்பட்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, அரச வர்த்தக கூட்டுத்தாபனம், தேசிய உணவு அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபை ஆகியவற்றின் ஊடாக மாத்திரம் உளுந்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்துசெல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமை கிடைக்கும். நன்மை கிடைக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் ஆலோசனை ஏற்கப்படும். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் சில பிரச்னைகள் வரக்கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி. உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மீனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# இலங்கை அரசுடன் பேசி மீனவர் பிரச்னைக்கு தீர்வு

## மத்திய அரசுக்கு நீதிமன்றம் அறிவுறுத்து

**சென்னை, ஏப். 03**

**தமிழக மீனவர்களின் அவல நிலையை கருத்தில் கொண்டு இலங்கை அரசுடன் பேசி விரைவில் மீனவர்களின் நீண்டகால பிரச்னைக்கு மத்திய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.**

தமிழக மீனவர்கள் நல அமைப்பு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே உயர்நீதிமன்றம் இந்த அறிவுரையை வழங்கியுள்ளது.

கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்வதுடன், படகுகளையும் பறிமுதல் செய்கிறது. இதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இரு நீதியரசர்கள் முன்னிலையில் நடந்த இந்த வழக்கில் இலங்கை - இந்திய கூட்டுப்பணிக் குழு மூலம் இந்த விடயம் தொடர்பில் பேசி விரைவில் தீர்வு காணப்படும் என்று மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, இந்த வழக்கை வரும் ஜூன் மாதத்துக்கு ஒத்தி வைத்த நீதிமன்றம் அதற்குள் தமிழக மீனவர்களின் அவல நிலையை மத்திய அரசு கருத்தில் கொண்டு, இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுப்பணிக் குழு கூட்டத்தை இலங்கையுடன் கலந்து பேசி எவ்வளவு விரைவாக கூட்ட முடியுமோ, அவ்வளவு விரைவாக கூட்டி இந்தப் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் - என்றார். (ஐ)

# தமிழ்நாட்டில் 68 கட்சிகள், 950 வேட்பாளர்கள் போட்டி

*சென்னை, ஏப். 03*

தமிழகத்தில், 68 அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை களமிறக்கியுள்ளன. 39 பாராளு மன்றத் தொகுதிகளில் 874 ஆண்கள், 76 பெண்கள் என்று மொத்தம் 950 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 54 வேட்பாளர்கள் உள்ளனர். மிகவும் குறைந்தபட்சமாக நாகபட்டினம் தொகுதியில், ஒன்பது பேர் களத்தில் உள்ளனர். மொத்த வேட்பாளர்கள் 950 பேரில், 609 பேர் சுயேச்சைகள் மற்றவர்கள் கட்சி வேட்பாளர்கள்.

தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெற்ற கட்சிகள், அங்கீகாரம் பெறாத பதிவு செய்யப்பட்ட கட்சிகள் என, மொத்தம் 68 கட்சிகள், 341 வேட்பாளர்களை களம் இறக்கி உள்ளன. பகுஜன் சமாஜ் கட்சி, நாம் தமிழர் கட்சி ஆகியவை, 39 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

இதற்கு அடுத்தபடியாக, அ.தி.மு.க. 34, பா.ஜ., 23, தி.மு.க., 22, நாடாளும் மக்கள் கட்சி 12; பா.ம.க., 10 காங்கிரஸ் 9 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. (ஐ)

# 2026இல் தி. மு. க., அ. தி. மு.க. இல்லாத கூட்டணியுடன் ஆட்சி!

## பாட்டாளி மக்கள் கட்சி



*சென்னை, ஏப். 03*

“2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தி. மு. க, அ. தி. மு. க. கட்சிகளை தவிர்த்து பிற கட்சி களுடன் கூட்டணி ஆட்சி அமைக்கப்படும்” என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் பிரசாரத்தில் ஈடுபட்ட அவர்,

“கச்சத்தீவு விவகாரத்தில் 1970ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை தமிழ்நாட்டு மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் தி. மு. க. கச்சதீவை மீட்போம் என வாக்குறுதி அளிக்கும். ஆனால், நிறைவேற்றாது. நாங்கள் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றால் பிரதமரிடம் வலியுறுத்தி கச்சதீவை மீட்க நடவடிக்கை எடுப்போம். வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தி. மு. க, அ. தி. மு. க. தவிர்த்து, பிற கட்சிகளுடன் கூட்டணி ஆட்சி அமைக்கப்படும்” - என்றார். (ஐ)

# தேர்தலுக்குள் கச்சதீவை மீட்டால் எங்கள் வாக்கு பா. ஜ. கட்சிக்கே!

## நாம் தமிழர் சீமான்

*திண்டுக்கல், ஏப். 03*

தேர்தலுக்குள் கச்சதீவை மீட்டு கொடுத்தால் நானும் எனது கட்சியினரும் பா. ஜ. கவுக்கு வாக்களிக்கிறோம் என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அன்று முதல் இன்று வரை இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுப்பவன் நான் மட்டுமே. இலங்கையில் தமிழர்களை கொன்று குவித்த கட்சிக்கு ஆதரவான காங்கிரஸ், தி. மு. க.வுக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும் என்றும் கூறினார்.

தேனியில் பிரசாரத்தில் ஈடுபட்ட அவர்,

“சின்னம் முடக்கப்பட்ட போதும் எண்ணத்தை மாற்ற முடியாது என்ற அடிப்படையில் அவர்கள் கொடுத்த சின்னத்துடன் களத்தில் நிற்கிறோம். தி.மு.க., அ.தி.மு.க., பாரதிய ஜனதா பெரிய கட்சி என்கின்றனர். ஆனால் தனித்து நிற்க பயப்படுகின்றனர்.

“கச்சதீவை மீட்காமல் 10 ஆண்டுகளாக கோமாவில் இருந்து விட்டு 10 நாட்களில் தேர்தல் வரவுள்ள நிலையில் இதுபற்றி பா.ஜ.க. பேசி வருகிறது. நான் 13 ஆண்டுகளாக கச்சதீவை பற்றி பேசி வருகிறேன். 6 மாதங்களுக்கு முன்பு மத்திய மந்திரி அமித்ஷாவிற்கு இது குறித்து கடிதம் எழுதினேன். தேர்தலுக்குள் கச்சதீவை மீட்டு கொடுத்தால் நானும் எனது கட்சியினரும் பா. ஜ. கவுக்கு வாக்களிக்கிறோம் - என்றார்.

# ஸ்டாலின் பாணியில் பழனிசாமி பிரசாரம்

*திருப்பத்தூர், ஏப். 03*

திருப்பத்தூர் சந்தையில் அ. தி. மு. க. வேட்பாளரை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி நேற்று காலை வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பாணியில் சந்தை மற்றும் தேநீர் கடைகளுக்கு சென்று எடப்பாடி பழனிசாமி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதால் அ. தி. மு. கவினர் உற்சாகமடைந்து ஆரவாரம் செய்தனர்.

தமிழ்நாட்டில் மக்களவை தேர்தல் வரும் 19ஆம் திகதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதையொட்டி தமிழக தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் வேட்பாளர்களை ஆதரித்து கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரணிலின் தலைமை நாட்டுக்குத் தேவை!

## கூறுகிறார் செஹான் சேமசிங்க



**கொழும்பு, ஏப். 03**

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மிகவும் திறமையான மற்றும் பொருத்தமான தலைவர் என்பதை இது வரை அடைந்துள்ள முன்னேற்றம் உறுதிப்படுத்துவதாகவும், எனவே எதிர்காலத்தில் அவரது தலைமை நாட்டுக்குத் தேவை எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

இதுவரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வைத்து நாட்டை யார் வேண்டுமானாலும் ஆளலாம் என சிலர் நம்பத் தூண்டுவதாகவும் ஆனால் அது சரியானதல்ல எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர், அதற்காக சுமார் 04 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

அதன்படி, 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கும் பணி நிறைவு செய்யப்பட உள்ளது. ஆனால் கடந்த மே மாதம் முதல் அஸ்வெசும கொடுப்பனவு கோரி விண்ணப்பித்த 34 இலட்சம் பேர் குறித்து மீண்டும் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்பதைக் கூறவேண்டும்.

மேலும், புதிதாக சமர்ப்பிக்கப்படும் 04 இலட்சம் விண்ணப்பங்கள் குறித்தும் முழுமையான கணக்கெடுப்பு நடத்தப்படும். இந்த கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை மேலும் வலுப்படுத்த நாங்கள் அவ்வாறு செய்கிறோம்.

அதன்படி, கடந்த மாதத்தில் பணவீக்கம் 0.9 வீதத்தினால் குறைந்துள்ளது. ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளது. அதன் பலன்களை நுகர்வோருக்கு வழங்கத் தேவையான பின்னணி உருவாகி வருகிறது.

பொருளாதாரம் தொடர்பாக, பல்வேறு நபர்கள் சில விடயங்களை குறிப்பிட்டு, பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால் அவைகள் நியாயமானவைகள் அல்ல என்பது நாட்டு மக்களுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் வழங்கிய தலைமைத்துவத்தைப் பாராட்ட வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மிகவும் திறமையான மற்றும் பொருத்தமான தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்பதை இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் உறுதிப்படுத்துகிறது. பொருளாதார நெருக்கடியை மிகவும் திறமையாக சமாளித்தார். எனவே, அவரது தலைமை தொடர்ந்தும் நாட்டுக்குத் தேவை-என்றார். (அ)

## தமிழகத்தின் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் பங்குகொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகள் நல்லூரில்



யாழ்ப்பாணம், ஏப். 03

தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர் த. இராமலிங்கம் பங்குகொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஆதீன பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலக இயக்குநரும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய இ.சர்வேஸ்வரா தலைமையில் காலை 9 மணிக்கு இடம்பெறும் காலை அமர்வில் பட்டிமன்றங்களில் பேசும் ஆர்வமுள்ள இளையோருக்கான பயில்களம் இடம்பெறவுள்ளது.

செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள மாலை அமர்வில் இலக்கியச்சுடர் த. இராமலிங்கத்தை நடுவராகக் கொண்டு சிந்தனை அரங்கம் இடம்பெறவுள்ளது.

இளைஞர்களின் எதிர்காலத்தை ஆகச்சிறப்பாகச் செப்பனிடுவது எந்தச் சூழல் என்ற பொருளில் இடம்பெறும் சிந்தனை அரங்கில்

வீட்டுச் சூழலே என தென்னாடு ஆசிரியர் ஜீவா சஜீவனும் கல்விச் சூழலே என மருத்துவ பீட மாணவி ந. அபிராமியும் நட்புச் சூழலே என உதவி விரிவுரையாளர் விக்கி. சாரங்கனும் சமுதாயச் சூழலே என தமிழ்நாடு தேவகோட்டை வி.யோகேஸ் குமாரும் கருத்தாடவுள்ளனர்.

## இலஞ்ச, ஊழல்கள் ஆணைக்குழுவுக்கு புதிய பணிப்பாளர் நாயகம் நியமனம்

கொழும்பு, ஏப். 03

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக டபிள்யூ. கே.டி.விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும் புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

## பல்கலைகளுக்கு புதிய ஆசிரியர்கள் இணைத்துக் கொள்வதற்கு அனுமதி!



கொழும்பு, ஏப். 03

பல்கலைக்கழகங்களுக்கு புதிய ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

இதனால் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஏராளமான பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும் இதனை கருத்திற்கொண்டே புதியவர்களை இணைத்துக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக பேராசிரியர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சுமார் 6200 ஆசிரியர்கள் இருப்பதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (அ)

## மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை ஆராய குழு நியமனம்!

கொழும்பு, ஏப். 03

பொதுமக்களின் கவலைகள் மற்றும் பாராளுமன்ற விவாதங்களை தொடர்ந்து, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமித்துள்ளார்.

தினேஷ் ஸ்டீபன் வீரக்கொடி, அர்ஜுன ஹேரத், இந்திரஜித் குமாரசுவாமி, சுதர்மா கருணாரத்ன, அந்தோனி நிஹால் பொன்சேகா, அனுஷ்கா எஸ் விஜேசிங்க மற்றும் துமிந்த ஹூலங்கமுவ ஆகியோர் சுயாதீன சம்பளக் குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது நிதிக்கான குழுவின் அதிகரித்து வரும் அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் வகையில், ஜனாதிபதி விக்கிரமசிங்க சுயாதீனமான சம்பளக் குழுவை நிறுவியுள்ளார். இந்த குழு, மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள திருத்தம் தொடர்பான கோப் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் சர்ச்சைக்குரிய சம்பள உயர்வை மதிப்பாய்வு செய்யும்.

கோப் அறிக்கையில், அதன் தலைவர் ஹர்ஷ டி சில்வா, மத்திய வங்கியின் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலின் அதி முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

மத்திய வங்கி தன்னாட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டாலும், அது பாராளுமன்றத்திற்கு, குறிப்பாக தேசம் எதிர்கொள்ளும் நிலவும் பொருளாதார சவால்களுக்கு மத்தியில் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதை அது வலியுறுத்துகிறது.

4 வாரங்களுக்குள் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அறிக்கையின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு வரும் வரை மத்திய வங்கி சம்பள உயர்வை ஒத்திவைக்க வேண்டும் என்றும் கோப் பரிந்துரைத்தது. (அ)

## தபால் ஊழியர்கள் பற்றாக்குறை கடித விநியோகத்துக்கு இடையூறு

கொழும்பு, ஏப். 03

தபால் விநியோக ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் கடித விநியோகத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

தபால் விநியோக ஊழியர்களின் பற்றாக்குறையால் சில நாட்கள் தாமதத்தின் கீழ் சில மாகாணங்களில் கடிதங்களை விநியோகிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் சத்குமார தெரிவித்தார்.

வலயங்களாகப் பிரித்து கடிதங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தபால் விநியோக ஊழியர்கள் உள்ளிட்ட சுமார் 2000 ஊழியர்களுக்கு வெற்றிடம் காணப்படுவதாகவும் தபால்மா அதிபர் கூறினார்.

பெரும்பாலான அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளமை மற்றும் புதிய அதிகாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படாமை ஆகிய காரணங்களால் தபால் சேவையில் சில நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## எடை குறைந்த பாண் தயாரித்த பேக்கரிகளின் மீது நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 03

அளவீடு, தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் கடந்த மூன்று மாதங்களில் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது எடை குறைவான பாண்களை விற்பனை செய்த 305 பேக்கரிகள் மற்றும் கடைகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

994 பேக்கரிகள் மற்றும் கடைகளில் சோதனை நடத்தப்பட்டதில், குறைந்த எடை கொண்ட பாண் தயாரித்த மற்றும் விற்பனை செய்த 190 பேக்கரிகள் மற்றும் 115 கடைகள் அடையாளம் காணப்பட்டன. கொழும்பில் அதிகபட்சமாக 34 பேக்கரிகளும் 24 கடைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதன்படி,குறித்த பேக்கரிகள் மற்றும் கடைகள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

# மைத்திரிபாலவுக்கு தற்துணிவு இல்லை

## காவிந்த ஜயவர்தன குற்றச்சாட்டு

**கொழும்பு, ஏப். 03**

**உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி தொடர்பில் அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று மைத்திரிபால சிறிசேன சிறுபிள்ளை போல் பேசுகிறார். உண்மையை மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்த அவருக்கு தற்துணிவு கிடையாது. அரசியல் நோக்கத்துக்காகவே குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. தற்போது பிரதான சூத்திரதாரியும் அரசியல் நோக்கத்துக்காவே பாதுகாக்கப்படுகிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டு ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ள போதும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. உண்மைக்கான காத்திருப்பு மாத்திரமே மிகுதியாகுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன வெட்கப்பட வேண்டும்.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி தொடர்பில் அவர் சொன்னார், இவர் சொன்னார், நிகழ்வொன்றில் வைத்து குறிப்பிட்டார். என்று சிறுபிள்ளை போல் பேசுகிறார். மக்கள் மத்தியில் உண்மையை குறிப்பிட அவருக்கு தற்றுணிவு கிடையாது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் 269 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டார்,500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தார்கள். பலர் இன்றும் படுக்கையில் விசேட தேவையுடையவர்களாக உள்ளார்கள். இவர்களின் நிலையை கண்டு மைத்திரிபால சிறிசேனவுக்கு மனவேதனை என்பதொன்று இல்லையா?

அரசியல் நோக்கத்துக்காகவே குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. தற்போது குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியும் அரசியல் நோக்கத்துக்காவே பாதுகாக்கப்படுகிறார். ஆகவே மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்காகவேனும் உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு நீதி வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துவோம் அதற்காக போராடுவோம்-என்றார். (அ)

# எனது பாதுகாப்பில் பிரச்னை கிடையாது

## கூறுகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஏப். 03

தமக்கு பாதுகாப்பு தொடர்பில், எவ்வித பிரச்னையும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தற்போது போதியளவான பாதுகாப்பு தமக்கு கிடைக்கப் பெறுவதாகவும் அவர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி, ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பில், அண்மையில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து குறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

எனினும், குறித்த வழக்கு தற்போது, நீதிமன்றில் நிலுவையில் உள்ளதால் அது தொடர்பில், தாம் எவ்வித கருத்தையும் வெளியிட முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# கூரிய ஆயுதத்தினால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு, ஏப். 03

கலவானை நகரில் உள்ள தனியாருக்குச் சொந்தமான கார் பழுதுபார்க்கும் நிறுவனத்துக்கு அருகில் நேற்றுக் காலை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர்.

கலவானை, கோனகலகந்த பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 54 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் அவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளதாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை கலவானை பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

# கொழும்பை மையப்படுத்தியே கட்சிகளின் மே தினக் கூட்டம்!

கொழும்பு, ஏப். 03

பிரதான அரசியல் கட்சிகள் கொழும்பை மையப்படுத்தியே மே தின கூட்டத்தையும், பேரணியையும் நடத்தவுள்ளன. இதனால் கொழும்பில் விசேட பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்த பாதுகாப்பு தரப்பினர் தயாராகி வருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி மருதானையிலும், மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி கெம்பல் பார்க் மைதானத்திலும் மே தின கூட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியும் கொழும்பிலேயே மே தின கூட்டத்தையும், பேரணியையும் நடத்தவுள்ளன. இதர சிறு கட்சிகளும், தொழிற்சங்கங்களும் கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளையே தேர்வு செய்துள்ளன.

அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மே தின கூட்டம் நடத்தப்படும் இடத்தை இன்னும் வெளியிடவில்லை. (அ)

# இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினரின் சொத்துக்கள் எரிப்பு



கொழும்பு, ஏப். 03

இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினர் ஒருவரின் வீடு மற்றும் அவரின் சொத்துக்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

மதுரங்குளி - முக்குத்தொடுவாய் பிரதேசத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்யுமாறு கோரி நேற்று மதுரங்குளி - தொடுவாய் பிரதான வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மதுரங்குளி தொடுவா பகுதியில் இயங்கி வரும் தொழிற்சாலையால் அப்பிரதேசத்தில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, குறித்த தொழிற்சாலையை சட்ட ரீதியான முறையில் முன்னெடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினர் தலைமையில் சிலர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையிலேயே, இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினரின் வாகனம் உள்ளிட்ட சொத்துக்கள் சில காடையர் குழுவினரால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வன்முறைச் சம்பவத்தை வன்மையாக கண்டித்தும், சந்தேக நபர்களை கைது செய்ய கோரியும் மதுரங்குளி - தொடுவா பிரதான வீதியை மறைத்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கோசங்களை எழுப்பியும் சுலோகங்களை ஏந்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து, இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினரின் வீடு மற்றும் அவரின் சொத்துக்களுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 06 சந்தேக நபர்கள் மதுரங்குளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (அ)

# குற்றக் கும்பலை சேர்ந்த 9 பேர் கைது

கொழும்பு, ஏப். 03

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தில் செயல்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் கும்பலைச் சேர்ந்தவர்களைக் கைது செய்வதற்காக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் கீழ் இந்தக் குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், கோனபீனுவல, ஹிங்குரங்கொட, ஹிக்கடுவை, வாதுவை, நீர்கொழும்பு, கனேமுல்லை, வாழைத்தோட்டம், மற்றும் புறக்கோட்டை ஆகிய பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ரணிலுடன் சேர்வதே சஜித்துக்கு நல்லது!

## ஹரின் பெர்ணான்டோ ஆலோசனை



கொழும்பு, ஏப். 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயல்பட்டால் அது சஜித்துக்கே சாதகமாக அமையும். எனவே, இது தொடர்பில் அவர் சாதகமாக பரிசீலிக்க வேண்டும் என்று அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ ஐக்கிய மக்கள் சக்தியுடன் இன்னும் அதிகாரபூர்வமாக பேச்சுகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனினும், உத்தியோகபூர்வமற்ற ரீதியில் சந்திப்புகள் இடம்பெறுகின்றன.

ரணிலுடன் இணைந்து செயற்படாவிட்டால் சஜித் பிரேமதாச தனிமைப்படுத்தப்பட்டுவிடுவார். எனவே, ரணிலுடன் பயணித்து அவர் அனுபவத்தை பெறுவதே சிறந்தது.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே பொது வேட்பாளராக போட்டியிடுவார்- என்றார். (அ)

# தயாசிறியை மீண்டும் அழைக்கின்றது சு.க.!

கொழும்பு, ஏப். 03

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுமாறு அக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

பொதுச்செயலாளர் பதவி அல்லாமல் உப தலைவர் பதவியொன்றை வழங்குவதற்கு அக்கட்சி தயாராகவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

எனினும், இது தொடர்பில் தயாசிறி தரப்பில் இன்னும் எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் தயாசிறி ஜயசேகர, மனிதநேய மக்கள் கூட்டணி எனும் புதிய அரசியல் கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யானை சின்னத்தில் ரணில் போட்டியிட்டால் ஆதரவில்லை

## பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு

கொழும்பு, ஏப். 03

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யானைச் சின்னத்தில் போட்டியிட்டால் அவருக்கு உதவமாட்டேன் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

கம்பஹா மாவட்ட முன்னாள் உள்ளூராட்சி தலைவர்களுடன் உடுகம்பலை அரசியல் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

எதிரணியினர் என்ன சொன்னாலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எண்ணம் தமக்கு இல்லை எனவும், தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தலில் யானைச் சின்னமோ, மொட்டுச் சின்னமோ அல்லாமல் பொதுச் சின்னத்தில் தேசிய வேட்பாளராக போட்டியிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டுமானால் அதற்கு பொதுஜன



பெரமுனவின் ஆதரவு தேவை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாமல் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்துவது தொடர்பில் கட்சியில் கலந்துரையாடல் இல்லை எனவும் நாமல் ஜனாதிபதி ஆவதற்கு இன்னும் காலம் உள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# யாழில் திடீரென பற்றி எரிந்த வீடு

யாழ்ப்பாணம், ஏப். 03

அராலி கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்று நேற்று முன்தினம் தீக்கிரையாகியுள்ளது.

அதனால் பெறுமதியான சொத்துக்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

வீடு திடீரென தீ பிடித்து எரிந்ததாகவும், அதனை கட்டுப்படுத்த முயன்ற போதிலும் தீ வேகமாக பரவியதால் வீடு தீக்கிரையாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஞானசாரருக்கு பிணை கோரிய மனு நிராகரிப்பு!

கொழும்பு, ஏப். 03

4 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு பிணை வழங்குமாறு முன்வைக்கப்பட்ட மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை நிராகரித்துள்ளது.

தனது சேவை பெறுபவரை பிணையில் விடுவிக்குமாறு கோரி சட்டத்தரணிகள் முன்வைத்த பிணை மனு நேற்றுக் காலை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே இந்த மனுவை நிராகரித்தார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் இஸ்லாத்துக்கு எதிராக தெரிவித்த அவதூறான கருத்துக்களுக்காக அவருக்கு நான்கு ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (அ)

# பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு எதிரான மனுக்கள் முடிவுக்கு வந்தன!

கொழும்பு, ஏப். 03

பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்தமைக்கு எதிராக கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட தரப்பினர் முன்வைத்த 07 மனுக்களை பரிசீலிப்பதை முடிவுக்கு கொண்டுவர உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் நேற்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டன.

அப்போது சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், தேசபந்து தென்னக்கோனை நிரந்தர பொலிஸ் மா அதிபராக நியமித்தமைக்கு எதிராக தமது தரப்பினர் ஏற்கனவே மனுக்களை சமர்ப்பித்துள்ள நிலையில், பதில் நியமனத்தை எதிர்த்து தொடரப்பட்ட மனுக்களை தொடர வேண்டிய அவசியமில்லையென சுட்டிக்காட்டினர்.

இதன்படி, பதில் பொலிஸ் மா அதிபரின் நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட ஏழு அடிப்படை உரிமை மனுக்கள் மீதான பரிசீலனையை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (அ)

# கார்த்திகைப் பூ புலி இலச்சினை அல்ல அறிவிலித்தனமாக நடக்கும் பொலிஸார்

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 03

கார்த்திகைப்பூவை ஸ்ரீலங்கா அரசு விடுதலைப்புலிகளின் இலச்சினையாகவே பார்க்கிறது. இதனாலேயே தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டியில் இல்லமொன்றை அழகுபடுத்துவதற்காகக் கார்த்திகைப்பூவை வடிவமைத்த மாணவர்கள் காவல்துறையினால் அறிவிலித்தனமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். கார்த்திகைப் பூவை விடுதலைப்புலிகள் தேசியமலராகத் தெரிவுசெய்திருந்தார்கள் என்பதற்காக அது விடுதலைப்புலிகளை அடையாளப்படுத்தும் பூ அல்ல. அது தமிழ்த் தேசிய இனத்தின் தாயகச் சூழலின் அடையாளம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டியில் இல்லமொன்று கார்த்தகைப்பூவின் உருவத்தை உருவாக்கி வைத்திருந்தமையால் மாணவர்கள் சிலரும் கல்லூரி நிர்வாகமும் காவல்துறையினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர்கள் சுற்றுச்சூழலைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணைகளாக வகுத்து இயற்கையோடு இசைந்த வாழ்வை மேற்கொண்டு வந்தவர்கள், சங்கத் தமிழர்களால் காந்தள் என அழைக்கப்பட்ட கார்த்திகைப்பூ இப்போதும் தமிழ் வாழ்வுக்கு மிகவும் நெருக்கமான பூக்களில் ஒன்றாகவே இருந்துவருகிறது. சங்கக்கவி கபிலர் தொடங்கி தாயகக்கவி புதுவை இரத்தினதுரை வரை கார்த்திகைப் பூவைப் பற்றிப்பாடாத புலவர்களே இல்லையென்னும் அளவுக்குத் தமிழ் வாழ்வியலில் கார்த்திகைப்பூ மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

இதன் காரணமாகவே இந்தியாவில் தமிழ்நாடு கார்த்திகைப் பூவைத் தனது மாநில மலராகத் தேர்வு செய்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசு தனது பௌத்த பண்பாட்டுச் சூழலுக்கு அமைவாகத் தேசிய மலராக நீலோற்பலத்தையும் தேசிய மரமாக மெசுவா எனப்படும் நாகமரத்தையும் தெரிவு செய்துள்ளது. இலங்கைக்காடுகளில் ஒருபோதும் காணப்படாத சிங்கத்தைத் தேசியக் கொடியில் வாளேந்த வைத்த பின்னர் அதனால் இதுவரையில் இலங்கைக்குரிய தேசிய விலங்கொன்றைத் தெரிவு செய்ய முடியவில்லை.

இலங்கைத் தேசிய அடையாளங்கள் தமிழ் மக்களை உள்வாங்காது பௌத்த, சிங்களப் பெரும் தேசியவாதத்தின் குறியீடுகளாக அமைந்ததன் விளைவாகவே விடுதலைப்புலிகள் தேசிய மலராக ஈழத்தமிழ்ச் சூழலின் அடையாளமாக விளங்கும் கார்த்திகைப்பூவைத் தெரிவுசெய்ய நேர்ந்தது.

கார்த்திகைப்பூச் செடியிலுள்ள கொல்கிசின் என்னும் நச்சு இரசாயனம் அருமருந்துகளின் தயாரிப்பில் பயன்படுகிறது. இதன் பொருட்டுத் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிரிடப்படும் கார்த்திகைப்பூச்செடியால் பலகோடி ரூபாய்கள் அந்நியச்செலாவணியாகக் கிடைத்து வருகிறது.

ஆனால், கார்த்திகைப்பூச்செடியின் சிறப்புகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ள மறுப்பதாலேயே கார்த்திகைப்பூவுக்கு உத்தியோகப்பற்றற்ற தடையைப் பேணிவருகிறது. இயற்கை அதன் பரிணாமப்பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கியெறிந்து தன் பல்லினத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை ஸ்ரீலங்கா அரசு நினைவிற்கொள்ளவேண்டும்-என்றார்.

# மஹவ - அனுராதபுரம் ரயில் மார்க்கத்துக்கு சமிக்ஞை கட்டமைப்பை வழங்கும் இந்தியா

கொழும்பு, ஏப். 03

மஹவ முதல் அனுராதபுரம் வரை நிர்மாணிக்கப்படுகின்ற புதிய ரயில் மார்க்கத்திற்காக புதிய சமிக்ஞை கட்டமைப்பை வழங்க இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

புதிய சமிக்ஞை கட்டமைப்பு கணினியினூடாக செயற்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் எச்.எம்.கே. டபிள்யூ.பண்டார தெரிவித்தார்.

இதற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளது.

இந்திய கடனுதவியின் கீழ் குறித்த சமிக்ஞை கட்டமைப்பு நாட்டிற்கு கிடைக்கவுள்ளது.

இது தொடர்பில் இந்திய பிரதிநிதிகளுடன் அண்மையில் தாம் இந்தியாவில் கலந்துரையாடியதாக ரயில்வே பொது முகாமையாளர் எச்.எம்.கே. டபிள்யூ.பண்டார தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு? தீர்மானமில்லை என்கிறார் ரிஷாத் எம்.பி

மன்னார், ஏப். 03

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான பின்னர் எமது கட்சியின் உயர்பீடம் ஒன்றுகூடி யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் முடிவெடுப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் முசலி பகுதியில் விவசாயிகளுக்கு இலவச விதைகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட



பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தவரையிலே ஜூலை மாதத்திற்கு பின்னர் தேர்தலுக்கான வேலைப்பாடுகளை செய்யவேண்டிய கடமை தேர்தல் ஆணையத்துக்கு உள்ளது.

ஒக்ரோபர் மாதமளவில் தேர்தலை நடத்தியாக வேண்டும். இதைத்தான் எங்கள் அரசியலமைப்பு குறிப்பிடுகின்றது.

அதில் எந்த மாற்றங்களையும் செய்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. ஜனாதிபதித் தேர்தல் வந்தே தீரும். அதற்கு முன்னர் ஜனாதிபதி விரும்பினால் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை வைக்கலாம். அவ்வாறு இல்லை என்றால், ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபரில் நடந்தே தீரும் இல்லை என்றால் எதிர்காலத்திலே இந்த நாடு இருள் மயமாகிவிடும்.

அதுமட்டுமல்லாமல், உலக நாடுகள் அனைத்தும் எமது நாட்டை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்தே கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டோம். அதனை தொடர்ந்து தற்போது வரை அதே கூட்டணியில் பயணித்து வருகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுகின்றபோது எமது கட்சியின் உயர்பீடம் தேர்தலில் எந்த வேட்பாளரை தெரிவு செய்வது என்பது தொடர்பில் இறுதி முடிவெடுக்கும்-என்றார்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு நிதியும் இல்லை, அபிவிருத்திகளும் இல்லை!

## பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 03

**“கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு எவ்வித நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அபிவிருத்திக் கூட்டமும் நடைபெறவில்லை. இது ஒரு பாரிய புறக்கணிப்பு.பொது நிர்வாக அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள் நேரடியாக கல்முனைக்கு விஜயம் செய்து தீர்வைத் தரவேண்டும்.”**

**-இவ்வாறு வலியுறுத்தினார் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன். நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் தமிழர்களுக்கு உரிமை சார்ந்த தீர்வுமில்லை. கல்முனை வடக்கு விடயத்திலும் தீர்வுமில்லை. இன்னுமொரு பிரதேச செயலகத்தின் கீழ் அடிமைகளாக இருந்து செயற்படவேண்டிய நிலையில் அதிகாரிகள். பொது நிர்வாக அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள் நேரடி விஜயம் செய்து இந்த நாட்டில் திட்டமிட்டு ஒரு பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளை முடக்கும் அநீதிகளை இனங்கண்டு, அவற்றை விசாரணை செய்து அந்த மக்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் .

கல்முனை வடக்கு பிரதேசத்தில் கடந்த 25ஆம் திகதியில் இருந்து சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை அந்த மக்கள் முன்னெடுத்திருக்கின்றார்கள்.

சுமார் 33 வருடங்களாக இயங்குகின்ற அந்தப் பிரதேச செயலகத்தைப் புறந்தள்ளி மற்றுமொரு பிரதேச செயலகத்தில் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்தி அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், கல்முனை வடக்குப் பிரதேச செயலத்திற்கு மாத்திரம் அந்த நிதி ஒதுக்கீடு இல்லை. தொடர்ச்சியாக இயங்கி வருகின்ற அந்த பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதுடன் அந்த பிரதேச செயலகத்தின் அதிகாரங்களை முடக்குகின்றதுமான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அந்த மக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த காலங்களிலே எமது தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிப்புற்றது மாத்திரமல்லாமல் இந்த கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்திலே இருந்த பாரம்பரிய அரச காணிகள், அரச சொத்துக்கள், சிறு நீர்நிலைகள் முஸ்லிம் அரசியல்வாதிகள், கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் ஆகியோரின் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் மூலம் கபளிகரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த விடயங்களை நாங்கள் பல தடவைகள் பாராளுமன்றத்தில் பேசியிருக்கின்றோம். ஜனாதிபதியைச் சந்தித்த போதும் கூட எழுத்துமூல ஆவணம் நான் சமர்ப்பித்திருக்கின்றேன். ஆனால், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

இந்த விடயங்களையெல்லாம் கண்டித்தே எமது மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

இருந்த காணி அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. ஒரு கணக்காளர் இல்லாமையால் அங்கிருக்கும் உத்தியோகத்தர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் நிருவாகிகள் மாத்திரமல்ல அங்கு வாழும் தமிழ் மக்களும் இதில் அதிகம் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே தயவு செய்து பொது நிர்வாக அமைச்சர், அமைச்சின் அதிகாரிகள் நேரடி விஜயம் செய்து அந்த மக்களின் உள்ளக் குமுறல்களை, இந்த நாட்டில் திட்டமிட்டு ஒரு பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளை முடக்கும் அநீதிகளை இனங்கண்டு, அவற்றை விசாரணை செய்து அந்த மக்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்-என்றார்.

(அ)



# அல்-ஹிலால் வித்தியாலயம் காஸா சிறுவர்களுக்கு உதவி

அம்பாறை, ஏப். 03

காஸா சிறுவர்களின் நலன் புரி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி நிதியத்திற்கு சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயம் இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா நிதி அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்தப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களிடையே இருந்து திரட்டப்பட்ட மேற்படி நிதியை பாடசாலை அதிபர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கல்முனையில் அமைந்துள்ள வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீமிடம் குறித்த தொகைக்கான காசோலையை பணிமனையின் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் முன்னிலையில் கையளித்தார்.

இந்நிகழ்வில், பாடசாலையின் பிரதி அதிபர் நுஸ்ரத் பேகம், உதவி அதிபர்களான ஜஹ்பர், றொஸான் டிப்றாஸ், யூ.எல். லாபிர், ஏ.எல்.எம். உவைஸ், ஆசிரியர் ஜாஸிர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் இல்யாஸ் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பித்தக்கது.

(அ)

# தென்கிழக்கு பல்கலையில் இப்தார்

அம்பாறை, ஏப். 03

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட புவியியல்துறை மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த புனித ரமழான் இப்தார் நிகழ்வு கடந்த 28ஆம் திகதி பல்கலையின் கடற்கரை மணலில் இடம்பெற்றது.

கலை கலாசார பீட புவியியல் துறை பல்லின மாணவர்கள் பங்குகொண்ட இந்நிகழ்வில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், பூவியியல் துறைத் தலைவர் கே. நிஜாமிர், சிரேஷ்ட பதிவாளர் எம்.ரீ. அஷ்ஹர் உள்ளிட்டவர்களுடன் திணைக்கள தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

(அ)

# இளைஞர் சம்மேளனத்தினால் தலைமைத்துவ பயிற்சிப்பட்டறை



அம்பாறை, ஏப். 03

இறக்காமம் பிரதேச இளைஞர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பட்டறை ஆரம்ப நிகழ்வும் வருடாந்த இப்தார் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஆர்.றியாஸ் நெறிப்படுத்தலில் இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.எம்.அஹமட் றிஜாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இறக்காமம் கிளையின் தலைவரும், பிரபல சொற்பொழிவாளருமான மௌலவி எம்.எச்.வஹாப் (இஸ்லாஹி) கலந்து கொண்டு விசேட சொற்பொழிவாற்றினார்.

இதன்போது இறக்காமம் பிரதேச செயலக உள வளத் துறை ஆலோசகர் ஏ.எச்.றகீப், இறக்காமம் பொலிஸ் நிலைய பதில் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஜௌபர், அரசியல் பிரமுகர்கள் இளைஞர் சம்மேளன உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கிழக்கு மாகாணத்தில் செயலாளர் பதவிகளுக்கு முஸ்லிம் அதிகாரிகள் தொடர்ந்து புறக்கணிப்பு!

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 03

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுவரும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. செயலாளர் பதவிக்கு இதுவரை ஒரு முஸ்லிம் கூட நியமிக்கப்படாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஆயுர்வேத சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாணத்தில் செயலாளர் பதவிக்கு இதுவரை எந்த முஸ்லிம் அதிகாரியும் நியமிக்கப்படவில்லை. கடந்த வருடம் ஜூன் மாத்தில் இது தொடர்பாக வெளிக்கொண்டு வரப்பட்டபோதும் அந்த நடவடிக்கை இன்னும் செயற்படுத்தப்படாமல் இருக்கிறது. கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்த 5 அமைச்சுக்களில் 2 தமிழ்ச் செயலாளர்களும் 2 முஸ்லிம் செயலாளர்களும் ஒரு சிங்கள செயலாளரும் பணியாற்றி வந்தார்கள். இன சமநிலையை கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை இடம்பெற்று வந்தது.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு அமைச்சிலும் முஸ்லிம் செயலாளர் ஒருவரேனும் இல்லாமை கவலைக்குரிய விடயமாகும். முதலமைச்சரின் அமைச்சு, சுகாதார அமைச்சு வீதி அபிவிருத்தி அமைச்சுகளுக்கு தமிழ் செயலாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அதேபோன்று கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு ஆகியவற்றுக்கு சிங்கள செயலாளர்கள் மியமிக்கப்பட்டிருக்கின்றனர். இது இந்த மாகாணத்தில் வாழுகின்ற ஒட்டுமொத்த முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும் கொச்சைப்படுத்துகின்ற செயலாகவே காண்கிறேன்.

எனினும் இந்த விடயத்தை அரசியல் தலைமைத்துவங்கள் கண்டுகொள்ளாத காரணத்தினால் கிழக்கு மாகாணத்திலே அண்மைக் காலமாக அரங்கேற்றப்படுகின்ற முஸ்லிம் விரோத போக்காகவே இதனை நாங்கள் காண்கிறோம். இந்த நிலை நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அதிகாரிகள் பணிபுரிய முடியாத நிலையே எதிர்காலத்தில் ஏற்படும் அபாயம் இருக்கிறது.

எனவே ரணில் ராஜபக்ஷ ஆட்சியிலும் முஸ்லிம் விரோதப் போக்கு தொடர்ந்தும் இடம் பெற்று வருவதை காணக்கூடியதாக இருக்கிறது. அதனால் இது தொடர்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகம் விழித்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. அதேபோன்று முஸ்லிம் அரசியல் தலைமைகள், முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பில் பேசுகின்றவர்கள் என தெரிவிக்கக்கூடியவர்கள் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் , இது தொடர்பாக முஸ்லிம் சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள் கவனம் செலுத்த வேண்டும்-என்றார்.

(அ)

# சிரியாவில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

## பிராந்தியத்தில் மீண்டும் அதிகரிக்கும் பதற்றம்



டமஸ்கஸ், ஏப். 03

**இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை சிரியாவில் உள்ள ஈரானின் தூதரகத்தின் மீது குண்டு தாக்குதல் நடத்தியுள்ளன.**

இந்த நடவடிக்கை இஸ்ரேலை அதன் பிராந்திய எதிரிகளுக்கு எதிரான போரில் தீவிரப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரானின் தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் மூன்று மூத்த தளபதிகள் உட்பட ஏழு இராணுவ ஆலோசகர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

"டமஸ்கஸில் உள்ள ஈரான் துணை தூதரக கட்டடத்தை குறிவைத்து நடத்தப்பட்டுள்ள தாக்குதலில் ஏராளமான அப்பாவிகளை கொன்ற இந்த கொடூரமான பயங்கரவாத தாக்குதலை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்" என்று சிரியாவின் வெளியுறவு அமைச்சர் பைசல் மெக்தாத் கூறினார்.

இஸ்ரேல் நீண்டகாலமாக சிரியாவில் உள்ள ஈரானின் இராணுவ நிலைகளையும் அதன் ஆதரவு தரப்பினரின் இராணுவ தளங்களையும் குறிவைத்து வருகிறது.

காசா பகுதியில் ஈரான் ஆதரவு படையாக கருதப்படும் பலஸ்தீனிய ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி தாக்குதல்களை தொடக்க ஆரம்பித்தது.

காசா போர் வெடித்ததில் இருந்து, இஸ்ரேலின் இராணுவம் சிரியாவில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகரப் படை மற்றும் ஈரானிய ஆதரவு லெபனான் ஆயுதக் குழுவான ஹெஸ்பொல்லாவுக்கு எதிராக சிரியாவில் வான்வழித் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்தப் பின்புலத்திலேயே தற்போது தெஹ்ரானிலும் இஸ்ரேல் தாக்குதல்களை தொடுத்து வருகிறது.

இஸ்ரேல் சிரியாவில் தாக்குதல்களை நடத்தி வருவதால் இப்பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# வெனிசுலாவில் பெரும் காட்டுத் தீ!

## ஆபத்து என விஞ்ஞானிகள் எச்சரிக்கை



கராக்கஸ், ஏப். 03

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் பாரிய காட்டுத் தீவு பரவல் ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட தகவலில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மேலும் காலநிலை மாற்றம் அமேசன் மழைக் காடுகளையும் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஜனவரியிலிருந்து மார்ச் மாதம் வரை பெறப்பட்ட செய்மதி தகவல்களின் பிரகாரம் 30200 இடங்களில் தீ பரவியுள்ளது.

வெனிசுலாவில் ஏற்பட்ட தீப் பரம்பல் காரணமாக எதிர்வரும் கொடை காலத்தில் பாதிப்புக்கள் ஏற்படலாம் என ஆராய்ச்சியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 1999 ஆம் ஆண்டு பாரியளவில் தீ பரவல் ஏற்பட்டிருந்தது. விவசாய நோக்கத்திற்காக மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் தீ காரணமாக அதிக வெப்பம் மற்றும் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளதாகவும், மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு தகுந்த திட்டங்கள் வகுக்கப்படுவதில்லை என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடந்த சில மாதங்களில் பெய்த மழை காரணமாக அமேசன் காடுகள் புத்துயிர் பெற்றதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (அ)

# திருகுர்ஆனை தீயிட்டு சர்ச்சையை ஏற்படுத்திய சல்வான் மோமிகா மர்மமான முறையில் மரணம்!



ஒஸ்லோ, ஏப். 03

புனித குர்ஆனை பலமுறை எரித்த ஈராக்கிய நாத்திகரான சல்வான் மோமிகா நோர்வேயில் இறந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக இந்தியாருடே செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த நபர் பலமுறை இஸ்லாத்துக்கு எதிராக குர்ஆனை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டு சர்சையில் சிக்கிய நபர் ஆவார். இவர் உயிரிழந்துவிட்டதாக கூறப்படும் செய்தி தற்போது பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவர் பலமுறை சுவீடனில் அகதி அந்தஸ்து கோரிய போதிலும் சுவீடன் இவரது அகதித் தஞ்சக் கோரிக்கையை நிராகரித்து அவரை நாடு கடத்த தயாராக இருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதி புதன் கிழமை சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில், அதுவும் பள்ளிவாசலொன்றுக்கு முன்னால் இனம் தெரியாத ஒரு நபரால் புனித குர்ஆன் தீக்கிரையாக்கப்பட்டது.

சுவீடன் பொலிஸாரின் அனுமதி பெற்று நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது உலக முஸ்லிம்களை கொதித்தெழச் செய்யும் வண்ணம் அந்தக் கூட்டத்தில் இருந்த இருவர் குர்ஆன் பக்கங்களை கிழித்து, அதை கொண்டு தங்களது காலணிகளை துடைத்தனர். பின்னர் அதனை தீயிட்டு கொளுத்தினர்.

முஸ்லிம்களின் புனித குர்ஆன் எரிக்கப்பட்டமைக்கு எதிராக பெரும்பாலான நாடுகள் துருக்கியை தொடர்ந்து சவுதி அரேபியா உள்ளிட்ட பல நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

குர்ஆன் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, 37 வயதான வாலிபர் ஒருவரை சுவீடன் பொலிஸார் கைது செய்துள்ளனர். சல்வான் மோமிகா என்ற அந்த நபர், பல ஆண்டுகளுக்கு முன் ஈராக்கில் இருந்து தப்பித்து சுவீடனுக்கு வந்ததாக கூறப்படுகிறது.

"கருத்துச் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை சமூகத்திற்கு உணர்த்த தான் விரும்பினேன்" என்று குர்ஆனை எரித்த தன் செயலுக்கு அவர் நியாயம் கற்பித்திருந்தார்.

மேலும், "இது எங்களின் ஜனநாயக உரிமை. இவ்வாறு செய்யக்கூடாது என்று யாராவது சொன்னால், அவர்களின் கருத்து ஜனநாயகத்துக்கு ஊறு விளைக்க கூடியது" என்று சல்வான் கூறியிருந்தார்.

குர்ஆனை எரித்து கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்திய சல்வானின் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி அளிப்பதா, வேண்டாமா என்று முடிவு செய்யும் பொறுப்பு சுவீடன் பொலீசாருக்கு இருந்தது.

குர்ஆனை எரிக்கும் போராட்டத்திற்கு சல்வான் பொலீசாரிடம் அனுமதி கேட்டதுடன், சுவீடனில் குர்ஆனுக்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் அவர் கோரி இருந்தார் எனவும் சுவீடன் அரசு ஊடகமான டச் சுஸ் வெல் செய்தி வெளியிட்டிருந்தது. (அ)



# தன்னார்வத் தொண்டாளர்கள் 7 பேர் காஸாவில் உயிரிழப்பு!

## வான் தாக்குதலில் கொடூரம்

ஜெருசலேம், ஏப். 03

காசா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட வான் தாக்குதலில் உணவு வழங்கலில் ஈடுபட்டிருந்த தன்னார்வத் தொண்டாளர்கள் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியா, பிரித்தானியா, போலந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொல்லப்பட்டவர்களில் கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இரட்டைக்குடியுரிமை பெற்றவர்களும் அடங்குவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் வாகனத்தில் பயணித்தவர்களே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை 100 தொன் கிலோ கிராம் எடையுடைய உணவுப் பொருட்களை காசாவில் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதலானது மனிதாபிமான தொண்டு நிறுவனத்திற்கு எதிரான தாக்குதலாக அமைந்துள்ளதாக விமர்சிக்கப்படுகின்றது.

அத்தியவசிய உணவுப் பொருட்கள், யுத்த களத்தில் ஆயுதமாக பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புனித ரமழான் மாதம் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில் மேற்கு நாடுகள் காசாவில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி வருகின்றன. இருந்த போதிலும் யுத்த மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பின்லாந்தில் பாடசாலைக்குள் நேற்று காலை துப்பாக்கிச் சூடு!

ஹெல்சிங்கி, ஏப். 03

பின்லாந்தின் வான்டாவில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ள நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

இதேவேளை குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் 800 மாணவர்களும் 90 ஊழியர்களும் இருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கில் மாணவர்களின் கண் சுகாதாரம் குறித்து ஆராய்வதற்கு வேலைத் திட்டம்

## முதற்கட்டப் பணி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 03

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் இன்று புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கமைய, கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளை, வலயக் கல்வி பணிமனைகளூடாக இன்று முதல் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு, பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஊடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வை திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இவர்களில் தேவைப்படும் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும் மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு, மாணவர்களின் பாடசாலை கற்றல் நிறைவு பெறும்வரை தொடர்ச்சியாக இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின்போது, ஆளுநரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, மாகாண கல்வி மற்றும் சுகாதார அமைச்சுகள் இணைந்து இதில் பங்காற்றவுள்ளன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் முத்துசாமி மலரவன் அவர்களின் வழிநடத்தலின் கீழ் 06 மாத காலத்திற்குள் இந்த செயற்திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(அ)

# பஸ் கட்டணம் குறையாது!

கொழும்பு, ஏப். 03

பஸ் பயண கட்டண திருத்தம் தொடர்பில் தற்போது பரிசீலிக்க முடியாது என, தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தனியார் பஸ்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

லங்கா சுப்பர் டீசலின் விலைகள் மேலும் குறையும் பட்சத்தில் இதனை பஸ்கள் பயன்படுத்துவதற்கு முடியும்.

எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட்டபோதிலும், தற்போதைய டீசல் விலை அதிகரிப்பு 4 வீதத்தை கடக்கவில்லை.

லங்கா ஓட்டோ டீசல் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், பேருந்து பயணக்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை- என்றார்.

(அ)

# தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாகவும் 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு



கொழும்பு, ஏப். 03

தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாகவும் 2 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தமது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கடந்த மார்ச் மாதத்தில் 2 இலட்சத்து 9 ஆயிரத்து 181 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, மாதாந்தம் 2 இலட்சம் சுற்றுலா பயணிகள் என்ற இலக்கு அடையப்பட்டுள்ளதாக அமைச்சர் தமது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6 இலட்சத்து 35 ஆயிரத்து 784 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

(அ)

# சுற்றுலாத்துறையின் தேவைக்காக வான், பஸ் இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, ஏப். 03

சுற்றுலாத்துறையின் தேவைக்காக வான் மற்றும் சிறிய பஸ்களை இறக்குமதி செய்வதற்கு சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இருப்பினும் அந்த வாகனங்களின் இறக்குமதிக்கு சிறப்பு வரிச் சலுகைகள் எதுவும் இல்லை.

இதன்படி, 750 6-15 இருக்கைகள் கொண்ட வான்கள்



(மின்சார மற்றும் ஹைபிரிட் உட்பட) மற்றும் 250 16-30 இருக்கைகள் கொண்ட மினி பஸ்கள் மற்றும் 30-45 இருக்கைகள் கொண்ட பஸ்கள் குறிப்பாக சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக இறக்குமதி செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(அ)

# இந்தியாவிலிருந்து கொண்டுவந்த பீடி இலைகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 03

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி இலைகளுடன் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் மாம்புரி பகுதியிலிருந்து மதுரங்குளிப் பகுதிக்கு பீடி இலைகளைக் கொண்டு செல்ல முற்பட்ட ஒருவரே புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக பீடி இலைகளைக் கொண்டு செல்ல உள்ளதாக புத்தளம் பிராந்திய மூத்த கண்காணிப்பு பொலிஸ் அதிகாரிக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரினால் மாம்புரி திடல் பகுதியில் லொறியை மறைத்து சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது சுமார் 49 உரப்பைகளில் 1,435 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மதுரங்குளிப் பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியெனவை என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பீடி இலைகள் இந்தியாவிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

(அ)

# சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தொடர் பணிப்புறக்கணிப்பு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஏப். 03

நேற்று காலை ஆரம்பிக்கப்படவிருந்த தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு ஒத்திவைப்பதற்கு சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும், தெரிவு செய்யப்பட்ட 10 வைத்தியசாலைகளில் நேற்று காலை 6.30 முதல் 4 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணங்களால் நேற்று மாலை வரை பிற்போடப்பட்டுள்ளதாக சுகாதார செயலாளரினால் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, நேற்று காலை ஆரம்பிக்கவிருந்த காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் கூறினார்.

(அ)

# தேங்காய் அதிக விரயம் செய்யும் நாடுகளில் இலங்கை முதலிடம்!

கொழும்பு, ஏப். 03

உலகில் தேங்காய்களை அதிகம் விரயம் செய்யும் நாடுகளில் இலங்கை முதலிடத்தை வகிப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தெற்கு தெங்கு பயிர்ச் நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எனவே, தேங்காய் நுகர்வுக்கான பாவனையில் ஏற்படும் விரயத்தை குறைப்பது தொடர்



பான புதிய தொழில்நுட்ப அறிவை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

(அ)

# கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் கடற்கரையில் ஒதுங்கியது சடலம்!

திருமலை, ஏப். 03

மூதூர் - பஹ்ரியா நகர் கடற்பகுதியில் கை கால்கள் கட்டப்பட்ட நிலையில், சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

பிரதேச மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து, சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் மூதூர் -பஹ்ரியா நகரைச் சேர்ந்த 39 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் கை கால்கள் கட்டப்பட்ட நிலையில், அவரது வயிற்றுப் பகுதியில் மண் மூடையொன்றும் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனவே அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில், மூதூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

## வடக்கு...

வந்த நோயாளர்கள் குறிப்பாக முதியவர்கள், சிறுவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.

இதேசமயம், வவுனியா மருத்துவமனை சுகாதார ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றிலும் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

## உறுப்பினரின்றி...

மணி நேரம் ஒத்திவைத்திருந்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 15 பேரின் பெயர்களையும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 6 பேரின் பெயர்களையும் கூறி அழைத்த போதிலும் அவர்களில் ஒருவர்கூட சபையில் இருக்கவில்லை. இதனையடுத்து, சபையின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்திருந்தார் பிரதி சபாநாயகர்.

எனினும், 4 மணியின் பின்னர் பாராளுமன்றம் மீண்டும் ஆரம்பமானது.

(ஐ)

## 36மேலதிக...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழான கட்டளையை நிறைவேற்ற எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பை கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழான கட்டளைக்கு ஆதரவாக 55 வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 149 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

(ஐ)

## வெடுக்குநாறி...

கலந்து கொள்வதற்காக வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு சென்ற போது பொலிஸாரால் வீதி தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆலயத்திற்கு செல்ல விடாது தடுத்து நிறுத்தப்பட்டோம். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் பிரசன்னமாகியிருந்தார்.

வழிபாடுகளுக்கு செல்ல அனுமதிக்குமாறு பொலிஸாரிடம் கோரிய போதிலும் அவர்கள் அதனை மறுத்தார்கள். நீதிமன்ற தடையுத்தரவை காண்பிக்குமாறு கோரினோம்.

நீதிமன்ற தடையுத்தரவு இல்லையெனினும் அனுமதிக்க முடியாது என கூறினார்கள். அரசியலைப்பின் படி, மத சுதந்திரத்தை தடை செய்வது சட்ட விரோத செயல் என சுட்டிக்காட்டி பொதுமக்களுடன் ஆலயத்தை நோக்கி கால் நடையாக பயணித்தோம்.

சிரமத்திற்கு மத்தியில் ஆலயத்தை அடைந்து வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த போது பொலிஸார் காலணிகளுடன் ஆலயத்திற்குள் நுழைந்து ஆலய விக்கிரகங்கள் மற்றும் பூசைப் பொருட்களை சேதப்படுத்தி பக்தர்களையும் அச்சுறுத்தி வெளியேறுவதற்கு நிர்ப்பந்தித்தார்கள்.

மேலும் தாக்குதல் மேற்கொண்டு தாம் உட்பட 8 பேரை கைது செய்தனர். என்னுடைய உத்தியோகபூர்வ செயலாளர் இலக்கு வைக்கப்பட்டு அரை நிர்வாணமாக்கப்பட்டார்.

அரசியல் நோக்கங்ளுக்காக உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்துவதற்காக இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தன்னுடன் இணைந்து பணியாற்றுவபர்களுக்கும் சுதந்திரமாக அரசியலில் ஈடுபட முடியாத அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" என சபையில் தெரிவித்தார்.

சட்டவிரோத கைது மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என செல்வராசா கஜேந்திரன் சபாநாயகரிடம் கோரிக்கை முன்வைத்தார். (அ)

# கை வெட்டிய சம்பவம் ஒருவருக்கு மறியல்

வடமராட்சி, ஏப். 03

வடமராட்சி இளைஞரின் கையை வெட்டி எடுத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் கையை இழந்தவரின் மைத்துனர் கைது செய்யப்பட்டு - மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

புலோலி - வட்டுவனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் செல்வநாயகம் செந்தூரன் என்பவரின் கையை வெட்டிய வாள்வெட்டு கும்பல் அந்தக் கையையும் எடுத்துச் சென்றது.

கையை இழந்தவருக்கும் அவரின் தங்கையின் கணவருக்கும் (மைத்துனர்) இடையே ஏற்பட்ட காணித் தகராறே இந்த சம்பவத்துக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. (ஐ-02)

## உள்ளக...

அறியவில்லை. மக்களின் இறையாண்மைக்கு இலட்சக்கணக்கான மக்களே அச்சுறுத்தல் விடுத்தார்கள். இந்த நிலைமை எதிர்காலத்தில் தோற்றம் பெறாத வகையில் அனைவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்

- இவ்வாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவை நோக்கி குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் நேற்று விமல் வீரவன்ஸவின் உரைக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபாநாயகர் சபைக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

மக்களின் இறையாண்மையை இலட்சக்கணக்கான மக்களே அச்சுறுத்தினார்கள். அறகலய சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற கட்டடத்தை சுற்றிவளைப்பதற்கு ஒரு தரப்பினர் வருகை தந்தார்கள். பெரும் போராட்டத்துக்கு மத்தியில் பாராளுமன்றத்தை பாதுகாத்தோம்.

நெருக்கடியின் போது வெளிநாட்டு தரப்பினர் எவரும் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கவில்லை. பாராளுமன்றத்தை சுற்றிவளைக்க முற்பட்டது இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட பெரும் அச்சுறுத்தலாகும்.

உள்ளக மட்டத்தில் குறைபாடுகள் காணப்படும் போது வெளித்தரப்பினர் தலையிடுவார்கள். இது இயல்பானதே எமது தரப்பிலும் பல குறைப்பாடுகள் காணப்பட்டன. அறகலயவில் ஆரம்பத்தில் இருந்து அது வெளிப்பட்டது. ஆகவே எதிர்காலத்தில் இவ்வாறான நிலை தோற்றம் பெறாத வகையில் பொறுப்புடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## கல்முனை...

எட்டமுடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

நேற்று பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நாம் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. கல்முனையில் தமிழ் மக்களுக்கென ஓர் எல்லையுடனான பிரதேச செயலகம் அமைத்துக்கொடுக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழ்த் தரப்பினர் வேண்டிநிற்கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம், காணி அதிகாரம் போன்றவற்றை இடைக்காலத் தீர்ப்பில் நிராகரித்துள்ள நிலையிலும் வழக்கு இன்னும் முடியாத நிலையிலும் இந்தப் பிரச்னையில் அரசு எப்படி தலையிட முடியும்? எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும், 1989 இல் யுத்த சூழ்நிலை காரணமாக அப்போது கல்முனை பிராந்தியத்தில் இருந்த அன்றைய ஆயுத இயக்கங்களின் உறுப்பினர்கள் பல அச்சுறுத்தல்களை மேற்கொண்டு பலவந்தமான முறையில் இந்த உப பிரதேச செயலக உருவாக்கம் ஏற்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். (ஐ)

## அநுரவுடன்...

வேட்பாளர்களின் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து விவாதம் நடத்துவது நல்லதொரு நகர்வாகும் என்றும் அதன் மூலம் அவர்களின் கொள்கைகளை மக்கள் அறிந்து கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் விவாதத்துக்கு அநுரகுமார திஸநாயக்க தயாராக இருக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## முருகன்...

28ஆம் திகதி நாடு திரும்பவிருந்த நிலையில் காலமானார்.

ஏனையவர்களான முருகன் என்ற சிறீகரன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் திருச்சி சிறப்பு முகாமிலேயே அடைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தங்களுக்கு கடவுச்சீட்டு பெற உதவ வேண்டும் என்று பல தரப்பினரிடமும் கடிதம் மூலம் கோரியிருந்தனர். அத்துடன், முருகனின் மனைவியான நளினி நீதிமன்றத்தை நாடியிருந்தார்.

நீதிமன்ற உத்தரவை அடுத்து சென்னை துணைத் தூதரகத்துக்கு மூவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து அவர்களுக்கு கடவுச்சீட்டு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், மூவரையும் இலங்கை திரும்ப மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதைத் தொடர்ந்தே இன்றைய தினம் இவர்கள் கட்டு நாயக்கா விமான நிலையம் ஊடாக நாடு திரும்புகின்றனர். (ஐ)

## பொருளாதார...

பணிப்பாளர் பாரிஸ் ஹடாட்ட ரெஸோஸ் தெரிவித்தார்.

அத்துடன், ஏழைகள், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் பொருளாதார நெருக்கடி ஏற்படுத்திய தாக்கத்தை தணிக்க உறுதியான முயற்சிகள் முக்கியமானவை. இதனுடன் காத்திரமான நம்பகமான கட்டமைப்புசார் நடவடிக்கைகளுக்கான வழிமுறைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பேரினப் பொருளியல் உறுதித் தன்மைக்கு பங்களிப்பு செய்கின்ற மறுசீரமைப்புகளை பேணுதல், தனியார் முதலீடுகளை தூண்டக்கூடிய மற்றும் முலீட்டு உள் வருகையை தூண்டக்கூடிய மறுசீரமைப்புகளை துரிதப்படுத்தல் ஆகியவை செய்யப்பட வேண்டும். இவை பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையை குறைத்தல் ஆகியவற்றுக்கு முக்கியமாகும்.

இருப்பினும், தொடர்ந்து நான்கு வருடங்களாக வறுமை தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் 25.9 வீதமான இலங்கையர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தொழில்படை பங்குபற்றுதலிலும் வீழ்ச்சி காணப்பட்டது. குறிப்பாக, பெண்கள் மற்றும் நகரப் பிரதேசங்களில் இது காணப்பட்டது.

நுண், சிறிய, மத்திய அளவிலான நிறுவனங்கள் மூடப்பட்டதனால் இந்த பிரச்னை அதிகமானது. அதிக விலையேற்றம், வருமான இழப்புகள், போதிய வேலை வாய்ப்பின்மை ஆகியவற்றின் காரணமாக உணவுத் தேவைப்பாடுகள் மற்றும் சுகாதாரம், கல்வி சார்ந்த செலவுகளை சமாளிப்பதற்காக கடனை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை குடும்பங்களுக்கு ஏற்பட்டது.

பண வீக்கத்தின் படிப்படியான அதிகரிப்புக்கள் மற்றும் சிறிய நடைமுறைக் கணக்கு மிகைகள் ஆகியவற்றினால் 2025 ஆம் ஆண்டில் 2.5 வீத மத்திம வளர்ச்சியை அறிக்கை எதிர்வுகூறுகின்றது. எவ்வாறாயினும் அதிக கடன்சேவை கடப்பாடுகள் அரசிறை மிகுதிகளில் அழுத்தத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அறகலய...

முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர்,

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பு நிறைவடைந்த தினத்தன்று நீங்கள் (சபாநாயகர்) சபைக்கு விசேட உரையாற்றினீர்கள்.

அறகலய வேளையில் அரசமைப்புக்கு முரணான வகையில் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்க தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலும் அரசியல் தரப்பின் மட்டத்திலும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்தீர்கள்.

'9 செகவுனு' என்று தலைப்பிடப்பட்ட புத்தகத்தை நான் வெளியிட்டேன். அதில் தேசிய மற்றும் சர்வதேச தரப்பினர் உங்களுக்கு அழுத்தம் பிரயோகித்தமையையும் கொழும்பில் உள்ள தூதரகங்கள் செயல்பட்ட விதத்தையும் பெயர் குறிப்பிட்டு வெளிப்படுத்தியுள்ளேன்.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் வெளியிட்ட புத்தகத்தின் முன் அட்டையில் 'சூழ்ச்சி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், புத்தகத்துக்குள் அவ்வாறு ஏதும் குறிப்பிடப்படவில்லை.

நீங்கள் பொய்யுரைக்கவில்லை என்று நான் நம்புகிறேன். அதேபோல் மனசாட்சிக்கு அமைய நானும் பொய்யுரைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதியும் பொய்யுரைக்கவில்லை என்று நம்புகிறேன்.

பொருளாதார நெருக்கடியின் போது நாட்டின் இறையாண்மையை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயல்பட்ட தரப்பினர் தொடர்பில் நாட்டுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். ஆகவே, இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இரு நாள் விவாதத்தை நடத்த வேண்டும்.

நாட்டின் இறையாண்மையை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் செயல்பட்ட தரப்பினர் குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். கடந்த காலத்தை மறந்து விட்டு செயல்படலாம் என்று கருதுவது மக்களாணையை அவமதிப்பதாகும் - என்றார். (ஐ)

## வடக்கு, கிழக்கு...

வடக்கு மாகாணத்தின் வவுனியா, மாங்குளம், முறிகண்டி, நட்டாங்கண்டல், துணுக்காய், ஓமந்தை, கரிப்பட்ட முறிப்பு, சின்னத்தம்பனை, பாலைப்பாணி, மூன்றுமுறிப்பு, ஐயன்குளம், மடு,கீரி சுட்டான், தட்டாங்குளம், பகுதிகளில் பகல் காலை 10.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை பகல் பொழுது வெப்பநிலை 41 பாகை செல்சியஸை அண்மிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் உள்நிலப்பகுதிகளின் பல இடங்களில் வெப்ப அலை (Heat Waves) வீசுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

வெப்பச்சலனம் காரணமாக ஆங்காங்கே ஒரு சில இடங்களில் பிற்பகல் 2.00 மணிக்கு பின்னரும் காலை 7.00 மணிக்கு முன்னரும் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஆனாலும் இம்மழை, அதிகரிக்கும் வெப்பநிலையின் பாதிப்புக்களை தற்காலிகமாக தணித்து குறுகிய காலத்திற்கு மட்டுமே சௌகரியமான வானிலையை (Comfort Weather ) உருவாக்கும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை வெப்பநிலை உயர்வாகவே இருக்கும். எனவே அதிகரிக்கும் வெப்பநிலை, வெப்ப அலை தொடர்பிலும் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# கச்சதீவை இந்தியா மீளப்பெறமுடியாது

## ஈ.பி.டி.பி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 03

**"இரு நாட்டு உடன்பாடுகளின் அடிப்படையில் இந்தியாவால் வழங்கப்பட்ட கச்சதீவை இனி இந்தியா மீளப்பெறமுடியாது."- என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

கச்சதீவு அரசியல் பிரசார மேடை அல்ல, அது இரு நாடுகளின் இணக்கப்பாட்டுடன் இலங்கைக்கு சொந்தமாக வழங்கப்பட்டது ஒரு விடயம். ஆனால் தற்போது இந்திய பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கச்சதீவு விவகாரம் பேசு பொருளாக சூடு பிடித்துள்ளது.

தமிழகம் பாண்டிச்சேரி உட்பட்ட 40 பாராளுமன்ற தொகுதிகளில் இருந்து தமிழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதற்கான தேர்தல் களமாக உள்ள நிலையில் கச்சதீவை இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியே இலங்கையிடம் பறி கொடுத்ததாக அண்மையில் இந்திய பிரதமர் மோடி தமிழ்நாட்டில் தெரிவித்திருந்தார்.

ஆனால் இரு நாடுகளுக்கான எல்லை நிர்ணயத்தின்போது கச்சதீவை எந்தப்பக்கம் வைப்பதென்று தீர்மானிக்கும்போது அது இலங்கை பக்கமாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் தமிழ் நாடு தேர்தல் களம் முன்னர் எப்போதும் இல்லாதவாறு தற்போது தீவிரமடைந்துள்ள நிலையில் தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கை மீதும் இந்திய மத்திய அரசின் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்ற நிலையில் கச்சதீவு விவகாரம் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளால் தேசியவாத நிகழ்ச்சி நிரலாக மாற்றமடைந்துள்ளது.

ஆனால் கச்சதீவு 1974 ஆம் ஆண்டுமுதல் இலங்கையின் நிலப்பரப்பாகவே இருந்துவருகின்றது இது தேர்தலுக்கான கோசமே அன்றி வேறொன்றும் கிடையாது.

இதேவேளை இவ்விடயம் இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இந்திய மத்திய அரசின் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் இது உடன்பாடுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட விடயம் அதனை இனிப்பெறமுடியாது - என்றார். (அ)

# 10 வைத்தியசாலைகளில் நேற்று வேலைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஏப். 03

சம்பள பிரச்னையை முன்னிறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள 10 வைத்தியசாலைகளில் நேற்று வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி, கொழும்பு தேசிய வைத்தியசாலை, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, பேராதனை போதனா வைத்தியசாலை, திருகோணமலை போதனா வைத்தியசாலை, கேகாலை பொது வைத்தியசாலை, பொலனறுவை பொது வைத்தியசாலை, மன்னார் ஆதார வைத்தியசாலை, கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலை ஆகிய 10 வைத்தியசாலைகளில் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சம்பள பிரச்னைக்கு உரிய தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் என்று சுகாதார தொழிற்சங்கங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

நேற்று முன் தினமும் சம்பள பிரச்னைக்குத் தீர்வு கோரி சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் 4 மணித்தியால பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருந்த நிலையிலேயே நேற்று இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதனால், வைத்தியசாலைகளுக்கு சென்ற நோயாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கினர். (அ)

# பெரமுன உறுப்பினர்கள் சிலர் ரணில் பக்கம் தாவ தீர்மானம்!

கொழும்பு, ஏப். 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் நோக்கில் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் சிலர் கட்சியை விட்டு விலக தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதற்கமைய, காஞ்சன விஜேசேகர, பிரசன்ன ரணதுங்க, மஹிந்தானந்த அளுத்கமகே, பந்துல குணவர்தன, பிரமித பண்டார தென்னக்கோன் உள்ளிட்ட ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள் குழுவொன்று பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இல்லத்தில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் போது கட்சி வேறுபாடின்றி ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது தொடர்பாக இந்தக் குழுவினருக்கும் ராஜபக்ச ஆதரவாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்படி, இந்தக் குழு ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாடல் நடவடிக்கை மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நடைபெறவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து விலக திட்டமிட்ட உறுப்பினர்கள் அனைவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளுக்கு நான் ஜனாதிபதியானால் தண்டனை

## சஜித் பிரேமதாச அறிவிப்பு

கொழும்பு, ஏப். 03

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றவாளிகளுக்கு தாம் ஜனாதிபதியானால் தண்டனை வழங்கப்படும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாக தாம், பதவியேற்ற பின் இரு மாத காலப் பகுதிக்குள் 1948 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சட்டத்தின் கீழ் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனை அவர் குறிப்பிட்டார்.

குறித்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்ட ஆறு வாரங்களுக்குள் ஸ்கொட்லண்ட் யார்ட் மற்றும் அமெரிக்க உளவு நிறுவனம் போன்றவற்றுடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# உயிரிழந்த மூதாட்டியின் கை பெரு விரலில் மை!

## சொத்து மோசடி முயற்சியா?

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த மூதாட்டியின் கை பெரு விரலில் மை கிடந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மூதாட்டியின் சொத்துக்களை சட்டவிரோதமாக பெற்று இருக்கலாம் எனும் சந்தேகத்திலேயே பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் திடீர் சுகவீனம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் , உயிரிழந்த பெண்ணின் மகன் வெளிநாட்டில் இருந்து வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு , " தாயிடம் இருந்து சிலர் சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை எழுதி வாங்கியுள்ளனர்" என எனக்கு தகவல் கிடைத்துள்ளது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என கூறியுள்ளார்.

அதனையடுத்து , பணிப்பாளர் சட்ட வைத்திய அதிகாரிக்கு இந்த விடயத்தினை தெரியப்படுத்தியுள்ளார். அத்துடன் திடீர் மரண விசாரணை அதிகாரியும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார். அதன்போது பெண்ணின் கை பெருவிரலில் மை அடையாளம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பொலிஸார் உயிரிழந்த பெண்ணை பராமரித்தவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்தவேளை தாம் வைத்தியசாலையில் பெண்ணை அனுமதிக்கும்போது பெருவிரலில் மை அடையாளம் இல்லை எனவும், பின்னர் எப்படி வந்தது என தமக்கு தெரியாது எனவும் கூறியுள்ளனர்.

அதேவேளை , வெளிநாட்டில் வசிக்கும் உயிரிழந்த பெண்ணின் மகன் வைத்தியசாலைக்கு நேரில் வருகை தந்து பெண்ணை அடையாளம் காட்டிய பின்னரே உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும், அதுவரை சடலம் பிரேத அறையில் பாதுகாப்பாக வைத்திருக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# பிரிட்டனில் இருந்து நாடு திரும்பிய தமிழ் இளைஞர் சி.ஐ.டியால் கைது!

## புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில்

கொழும்பு, ஏப். 03

தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் பிரித்தானியாவில் இருந்து நாட்டுக்கு வருகை தந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவிலிருந்து நாட்டுக்கு வருகை தந்த குறித்த இளைஞன், மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக சென்றுள்ளார்.

இதன்போதே அவர் கடந்த 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில், கைது செய்யப்பட்ட இளைஞனின் தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் இருந்து கடந்த மாதம் 7 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தந்த குறித்த இளைஞனிடம் வவுனியா, வெடுக்குநாறிமலை ஆர்ப்பாட்டம் தொடர்பாகவும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழில் பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிஸாரினதும் அரச புலனாய்வாளர்களினதும் இராணுவத்தினரின் தலையீடுகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஆசிரியர் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்றைய தினம் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜிடம் முறைப்பாடு கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

கடந்த வாரம் நடைபெற்ற யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டியின் இல்ல அலங்காரங்களில் மாணவர்களின் வெளிப்பாடுகள் தொடர்பாக தெல்லிப்பழை பிரிவு பொலிஸார் மாணவர்களையும், ஆசிரியர்களையும் விசாரணைக்கு அழைத்தமையும் விசாரணைக்கு உட்படுத்திய மையும் அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற நடவடிக்கையாகும்.

இலங்கை அரசியலமைப் பின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் கலை ரீதியாகவும் குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் பாடசாலை மட்ட இல்ல விளையாட்டு போட்டி அலங்காரங்களில் மாணவர்களின் பாடசாலை மட்ட வெளிப்பாடுகள் இலங்கை அரசியலமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனசாட்சி சுதந்திரத்திற்கு உட்பட்டதாகும்.

இத்தகைய சுதந்திரங்களை மதிக்காத தெல்லிப்பழை பொலிஸாரின் அச்சுறுத்தல்களுடன் கூடிய விசாரணை செயற்பாடானது அடிப்படை மனித உரிமை களை மீறுவதுடன் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் அடக்கு முறைகளை பிரயோகிக்கின்ற செயற்பாடுகளாகும் - என்றுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மும்பை அணிக்கு மூன்றாவது தோல்வி!

மும்பை, ஏப். 03

நடப்பு ஐ. பி. எல். தொடரில் தொடர்ச்சியாக மூன்றாவது தோல்வியை தழுவியுள்ளது ஹார்திக் பாண்ட்யா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி. இதனால் புள்ளிப் பட்டியலில் 10ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது ஐ. பி. எல். அரங்கில் ஐந்து முறை சம்பியன் பட்டம் வென்ற அந்த அணி.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற நடப்பு தொடரின் 14ஆவது லீக் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி முதல் 4 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து தடுமாறியது. இதில் மும்பையின் முன்னாள் அணித்தலைவர் ரோகித் சர்மா, நமன் திர் மற்றும் டெவால்ட் பிரெவிஸ் ஆகியோர் கோல்டன் டக் அவுட் ஆகி வெளியேறினர். அவர்கள் மூவரின் விக்கெட்டையும் ராஜஸ்தானின் பந்துவீச்சாளர் ட்ரென்ட் போல்ட் கைப்பற்றினார். கிஷனை 16 ஓட்டங்களில் வெளியேற்றினார் பெர்கர்.

5ஆவது விக்கெட்டுக்கு திலக் வர்மா மற்றும் அணித்தலைவர் ஹார்திக் பாண்ட்யா இணைந்து 56 ஓட்டங்கள் சேர்த்தனர். 21 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பாண்ட்யா ஆட்டமிழந்தார். திலக், 32 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து சீரான இடைவெளியில் மும்பை அணி விக்கெட்டை இழந்தது. 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 125 ஓட்டங்கள் எடுத்திருந்தது.




126 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ராஜஸ்தான் விரட்டியது. முதல் ஓவரில் ஜெய்ஸ்வால் விக்கெட்டை வீழ்த்தினார் மபாகா. 5ஆவது ஓவரில் சஞ்சு சாம்சனை வெளியேற்றினார் ஆகாஷ் மெத்வால். தொடர்ந்து 7ஆவது ஓவரில் பட்லரையும் அவரே வெளியேறினார். அப்போது களத்துக்கு வந்த அஸ்வின், ரியான் பராக் உடன் சேர்ந்து 40 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார். 16 ஓட்டங்களில் அஸ்வின் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய ரியான் பராக், 39 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்தார். சிவம் துபே 8 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 15.3 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 127 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது ராஜஸ்தான். இதன் மூலம் புள்ளிப் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது ராஜஸ்தான். நடப்பு தொடரில் மூன்று போட்டிகளில் விளையாடி மூன்றிலும் வெற்றி பெற்றுள்ளது அந்த அணி. (ஐ)




## ஐ. பி. எல். அணிகளின் உரிமையாளர் கூட்டம்

புதுடில்லி, ஏப். 03

எதிர்வரும் 16ஆம் திகதி ஐ. பி. எல். அணிகளின் உரிமையாளர்கள் கூட்டம் அகமதாபாத்தில் நடைபெறவுள்ளது.

இந்திய கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டத்தில், அணிகளுக்கான ஏலத் தொகை மற்றும் வீரர்கள் தக்கவைப்பு ஆகியவற்றின் உச்சவரம்பை அதிகரிப்பது தொடர்பாக விவாதிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

இந்திய கிரிக்கெட் சபையின் செயலர் ஜெய் ஷா, தலைவர் ரோஜர் பின்னி, ஐ. பி. எல். தலைவர் அருண் துமல் உள்ளிட்டோர் பங்கேற்கும் இந்தக் கூட்டம், டில்லி கப்பிட்டல்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகளின் மோதலையொட்டி நடைபெறவுள்ளது.

தற்போது, அணிகளுக்கான ஏலத் தொகை உச்சவரம்பு ஒட்டுமொத்தமாக 100 கோடி இந்திய ரூபாயாக இருப்பதும் ஓர் அணி தக்கவைத்துக் கொள்ளும் வீரர்களுக்கான உச்சவரம்பு 4ஆக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹார்திக் பாண்ட்யாவுக்கு மும்பை ரசிகர்கள் எதிர்ப்பு




மும்பை, ஏப். 03

மும்பை ரசிகர்கள் மீண்டும் ஹார்திக் பாண்ட்யாவுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

மும்பை - ராஜஸ்தான் அணிகளின் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியின்போது, மும்பை அணித்தலைவர் ஹார்திக் பாண்ட்யாவுக்கு எதிராக மும்பை ரசிகர்கள் குரல் எழுப்பினர்.

நாணய சுழற்சியில் ஈடுபடுவதற்காக அவர் அழைக்கப்பட்டபோது, பார்வையாளர் அரங்கில் இருந்த மும்பை ரசிகசர்கள் ஹார்திக் பாண்ட்யாவுக்கு எதிராக குரல் எழுந்தது. மேலும், ரோஹித் சர்மாவின் பெயரையும் உச்சரித்தனர்.

இதை சிறிய சிரிப்புடன் கடந்தார் பாண்ட்யா. பின்னர், நாணய சுழற்சியின் பின்னர் பாண்ட்யா பேசியபோது ரசிகர்கள் மீண்டும் அவருக்கு எதிராக குரல் எழுப்ப, அவர்களை சற்று ஒழுக்கமுடன் நடத்து கொள்ளுமாறு தொகுப்பாளராக இருந்த சஞ்ஜய் மஞ்ச்ரேகர் ஒலிபெருக்கியில் அறிவுறுத்தினார்.

பிறகு, மும்பை இன்னிங்ஸில் பாண்ட்யா துடுப்பெடுத்தாட வந்தபோதும் ரசிகர்கள் அவ்வாறே ஒலியெழுப்பினர். எனினும், அதற்கு தனது துடுப்பாட்டத்தால் பதில் கூறினார் பாண்ட்யா. அவர் பௌண்டரிகள் விளாசத் தொடங்கியதும் ரசிகர்கள் அவருக்கு ஆதரவாக கோஷமிடத் தொடங்கினர்.

இந்தத் தொடருக்கு முன்பாக, மும்பை அணியின் அணித்தலைவர் பொறுப்பை ரோஹித் சர்மாவிடம் இருந்து பறித்து, ஹார்திக் பாண்ட்யாவிடம் வழங்கியதற்கு மும்பை ரசிகர்கள் இவ்வாறு அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். (ஐ)

## மோசமான சாதனையை சமன் செய்த ரோஹித்!

மும்பை, ஏப். 03

மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் ரோஹித் சர்மா ஐ. பி. எல். தொடரில் விரும்பத்தகாத சாதனை ஒன்றை சமன் செய்துள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் விளையாடின.

இதில், தொடக்க ஆட்டக்காரரான ரோஹித் சர்மா அவர் சந்தித்த முதல் பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். இந்தப்போட்டியில் அவர் ஓட்டம் எடுக்காமல் ஆட்டமிழந்ததன் மூலம் ஐபிஎல் தொடரில் விரும்பத்தகாத சாதனை ஒன்றை அவர் சமன் செய்தார்.

ஐ. பி. எல். போட்டிகளில் அதிக முறை முதல் பந்தில் ஆட்டமிழந்த வீரரான தினேஷ் கார்த்திக்கின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார். இதுவரை தினேஷ் கார்த்திக் மற்றும் ரோஹித் சர்மா இருவரும் ஐ. பி. எல். போட்டிகளில் 17 முறை டக் அவுட் ஆகியுள்ளனர்.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அதிகமுறை டக் அவுட் ஆன வீரர்களின் பட்டியல் - ரோஹித் சர்மா - 17 முறை, தினேஷ் கார்த்திக் - 17 முறை, கிளன் மக்ஸ்வெல் - 15 முறை, பியூஸ் சாவ்லா - 15 முறை, மந்தீப் சிங் - 15 முறை, சுனில் நரைன் - 15 முறை. (ஐ)







## உலகக் கிண்ண அணியில் விராட் கோலி இடம்பெறுவார்!

### இந்திய கிரிக்கெட் சபை அதிகாரி

புதுடில்லி, ஏப். 03

2024ஆம் ஆண்டுக்கான இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் ஜூன் முதலாம் திகதி அமெரிக்காவில் கோலாகலமாக நடைபெற இருக்கிறது.

ஐ. சி. சி. நடத்தும் இந்தப் போட்டியில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன. இதில் இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி பங்கேற்பாரா, மாட்டாரா என்ற கேள்வி எழுந்திருந்தது. இந்தியத் தெரிவுக் குழுவினர் இந்தத் தொடருக்கான அணியில் விராட் கோலி இடம் பெறுவதை விரும்பவில்லை என்ற ஒரு கருத்தும் சமூக வலைதளங்களில் வெளியானது.

இந்நிலையில், இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி இருபது - 20 உலகக்கிண்ணத்தில் இடம்பெறுவார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"ஐ. பி. எல். தொடரில் விராட் கோலி சிறப்பாக விளையாடி வருகிறார். அவர் உலகக்கிண்ண அணியில் இடம்பெறுவார். தெரிவாளர்கள்சமூக ஊடகங்களில் பரவும் கருத்துக்களுக்கு செவி சாய்க்க மாட்டார்கள். கிரிக்கெட் சமூக வலைதளங்களில் அல்ல மைதானத்தில் விளையாடப்படுகிறது" - என்றார். (ஐ)

# அயர்லாந்து இளம் பிரதமராக சைமன் ஹாரிஸ்: சமூக ஊடக செல்வாக்கை ஈர்க்கும் பிரதமர்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

தற்போது அயர்லாந்து நாட்டின் தலைவராக அதாவது பிரதமராக பதவியேற்கவுள்ளார் 37 வயதேயானா சைமன் ஹாரிஸ் (**Simon Harris**). இவர் தான் அயர்லாந்து நாட்டின் பிரதமர் பதவியை ஏற்கவுள்ள மிகவும் இளம் வயது தலைவர் ஆவார்.

**வாழ்க்கையில் கிடைத்த கௌரவம்:**

புதிய பதவி குறித்து சைமன் ஹாரிஸ் கூறுகையில், இது எனது வாழ்க்கையில் கிடைத்த மாபெரும் கௌரவம் என்று தெரிவித்துள்ளார். ஏப்ரல் ஒன்பதாம் தேதி சைமன் ஹாரிஸ் அயர்லாந்து நாட்டின் பிரதமராக பதவி ஏற்க உள்ளார்.




அவருக்கு பைன் கேயல் கூட்டணியின் கட்சிகள் ஹாரிஸ் தேர்வுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இதுகுறித்து பைன் கேயல் கட்சியின் துணைத் தலைவரான சைமான் கோவனி கூறுகையில் மிகவும் சிறப்பான தேர்வு இது. மிகச்சிறந்த பங்களிப்பை கொடுத்துள்ளார் சைமன் ஹாரிஸ். எனவே அவரது தேர்வு மிகச் சரியானது என்று தெரிவித்தார்.

கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சைமன் ஹாரிஸ் பேசுகையில் அர்ப்பணிப்பு உணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் மனிதநேயத்துடனும் நான் செயல்படுவேன். ஒரு கட்சித் தலைவராக மட்டுமல்லாமல் நாட்டின் தலைவராகவும் நான் மிகச் சிறந்த ஒரு பங்களிப்பை கொடுக்க திட்டமிட்டுள்ளேன் என்று தெரிவித்தார்.




**காசாவில் போர் நிறுத்தம் வலியுறுத்தியவர்:**

சர்வதேச அளவில் ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து சைமன் ஹாரிஸ் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தவர். உக்ரைனுக்குள் புகுந்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவது சட்டவிரோதமானது கொடுமையானது என்று வர்ணித்துள்ளார் சைமன் ஹாரிஸ். அதேபோல காசாவில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு சைமன் ஹாரிஸ் கல்வி அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறை அமைச்சராக பொறுப்பில் இருந்தவர்.

**அயர்லாந்து அரசியலில் முக்கிய நபரான சைமன் ஹாரிஸ், முன்னைய லியோ வரட்கர் எதிர்பாராத விதமாக வெளியேறியதைத் தொடர்ந்து, அயர்லாந்தின் இளம் பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார். 37 வயதாகும் சைமன் ஹாரிஸ், அயர்லாந்தின் இளம் பிரதமர் என்ற வரலாற்றை உருவாக்க உள்ளார்.**

குறிப்பாக கொரோனா காலத்தில் இவரது செயல்பாடுகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வரவிருக்கும் பொதுத் தேர்தல்களில் தோல்வி அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள ஆளும் ஃபைன் கேல் கட்சிக்கு (**Fine Gael party**) ஒரு முக்கியமான நேரத்தில் அவரது வேட்புமனு வந்துள்ளது, சின் ஃபெயின் ஒரு வலுவான போட்டியா ளராக உருவெடுத்துள்ளது.

**ஆரம்ப அரசியல் பின்னணி:**

சைமன் ஹாரிஸ் 1986 இல் அயர்லாந்தின் விக்லோவில் பிறந்தார். அவர் டப்ளின் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் இதழியல் படித்தார்.

ஆனால் அரசியலில் ஒரு வாழ்க்கையைத் தொடர தனது பட்டப் படிப்பை முடிக்கும் முன்பே வெளியே றினார்.

ஃபைன் கேலின் உறுப்பினரான சைமன் ஹாரிஸ், கட்சியின் இளைஞர் பிரிவில் பட்டம் பெற்ற பின்னர், இளம் வயதிலிருந்தே அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். தனது இளங்கலை பட்டப்படிப்பை முடிக் கவில்லை என்றாலும், அவர் விரைவில் ஒரு அர்ப்பணிப்புள்ள அரசியல்வாதியாக தன்னை நிலை நிறுத்திக் கொண் டார், கட்சிக்குள் பல்வேறு பாத்திரங்களில் பணியாற்றினார்.

**சமூக ஊடக செல்வாக்குள்ளவர்:**

சைமன் ஹாரிஸ் 2016 முதல் 2020 நடுப்பகுதி வரை அயர்லாந்தின் சுகாதார அமைச்சராக பணியாற்றினார். கோவிட் -19 தொற்று நோய்க்கான நாட்டினை நிர்வகிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

தற்போது உயர்கல்வி அமைச்சர் பதவியை வகிக்கும் அவர், இந்த பதவிகளில் அவரது பதவிக்காலம் அவரது தலைமைத்துவ திறன்கள் மற்றும் கொள்கை நிபுணத்துவத்தை வடிவமைத்துள்ளது.

சமூக ஊடகங்களில், குறிப்பாக டிக்டோக்கில் சைமன் ஹாரிஸின் திறமை குறிப்பிடத் தக்க கவனத்தை ஈர்த்துள்ளது, 92,000 பின்தொடர்பவர் கள் மற்றும் அவரது ஈர்க்கக்கூடிய உள்ளடக்கத்திற்காக 1.8 மில்லியன் லைக்குகள்.

அவரது ஆன்லைன் இருப்பு அவரது தொடர்புடைய ஆளுமையைக் காட்டுகிறது மற்றும் அவரது அரசியல் நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதற்கும் வாக்காளர்களுடன் ஈடுபடுவதற்கும் ஒரு தளத்தை வழங்குகிறது.


**பிரச்சார வியூகமும் சவால்களும்:**

தனது இளமை மற்றும் புதிய முன்னோக்கை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம், போட்டி கட்சிகளிடமிருந்து அதிகரித்து வரும் போட்டிக்கு மத்தியில் வாக்காளர்களுக்கு ஃபைன் கேலின் முறையீட்டை புத்துயிர் பெறுவதை சைமன் ஹாரிஸ் நோக்கமாகக் கொண்டுள்ளார்.

அவரது பிரச்சாரம் நெருக்கடி நிர்வாகத்தில், குறிப்பாக தொற்றுநோய்களின் போது, அவரது சாதனையை வலியுறுத்தக்கூடும், அதே நேரத்தில் கட்சிக்குள் முக்கிய கொள்கை முன்னுரிமைகள் மற்றும் கவலைகளையும் நிவர்த்தி செய்கிறது.

சைமன் ஹாரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டால், அடுத்த பொதுத் தேர்தலில் ஃபைன் கேலை வழிநடத்தும் சவாலை எதிர்கொள்வார். கட்சி தற்போது கருத்துக் கணிப்புக்களில் சின் ஃபெயினை விட பின்தங்கியுள்ளது என்பது உணமையே.

ஃபைன் கேல், பியன்னா ஃபெயில் மற்றும் பசுமைக் கட்சிக்கு இடையிலான சுழற்சி ஒப்பந்தத்தின் கீழ் 2020 இல் உருவாக்கப்பட்ட அயர்லாந்தின் கூட்டணி அரசாங்கத்தின் சிக்கல்களையும் அவர் வழிநடத்த வேண்டும்.



சைமன் ஹாரிஸ் சமூக ஊடகங்களில், குறிப்பாக டிக்டோக்கில் செயலில் இருப்பதற்காக அறியப்படுகிறார்.

அங்கு அவருக்கு 92,000 பின்தொடர்பவர்கள் மற்றும் அவரது வீடியோக்களில் 1.8 மில்லியன் லைக்குகள் உள்ளன.

அயர்லாந்தில் கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்குவதற்கான வெற்றிகரமான 2018 வாக்கெடுப்பு பிரச்சாரத்தில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

சைமன் ஹாரிஸ் தேர்ந்தெடுக்கப் பட்டால், 2017 இல் முதன்முதலில் பதவியேற்றபோது 38 வயதான அயர்லாந்தின் மிக இளைய பிரதமராக லியோ வரட்கரை விஞ்சுவார்.

சைமன் ஹாரிஸ், தனது இளமை மற்றும் அரசியல் புத்திசாலித்தனத்துடன், ஐரிஷ் அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். இது ஃபைன் கேல் மற்றும் அயர்லாந்தை எதிர்காலத்திற்கு வழிநடத்த தயாராக உள்ளது.

**இளம் வயது பிரதமர்:**

இதுவரை பிரதமராக இருந்து வந்தவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த லியோ வரட்கர் பதவி விலகியதைத் தொடர்ந்து சைமன் ஹாரிஸ் புதிய பிரதமராகியுள்ளார்.

லியோ வரட்கரின் தந்தை பெயர் அசோக் வரட்கர். இவர் மும்பையைச் சேர்ந்தவர் இளம் வயதிலேயே அயர்லாந்தில் குடியேறியவர். அங்கு திருமணமும் செய்து கொண்டு அயர்லாந்திலேயே குடியுரிமை பெற்று விட்டார்.

அத்துடன் ஓரினச்சேர்க்கைக்கு ஆதரவாக பகிரங்கமாக கருத்து தெரிவித்தவர் வரட்கர் என்பது குறிப்பிடத்தக்கது. அயர்லாந்தில் பைன் கேயல் கட்சி (**Fine Gael party**) தலைமையிலான கூட்டணிதான் ஆட்சியில் உள்ளது. பைன் கேயல் கட்சியின் தலைவராக இருப்பவர்தான் பிரதமர் பதவியிலும் இருப்பார்.

இதுவரை லியோ வரட்கர் கட்சித் தலைவராகவும், பிரதமராகவும் இருந்தார். இரு பதவிகளையும் அவர் ராஜினாமா செய்துள்ளதால் புதிய தலைவராக சைமன் ஹாரிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

People's Petition
**Northern and Eastern Provinces Civil Society Group**
**வடக்கு, கிழக்கு மாகாண சிவில் சமூக குழு**

# கருத்தாய்வு

**ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது எப்படி?**

காலம்: 06.04.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணி
இடம்: தேவநாயகம் மண்டபம், அரசடி, மட்டக்களப்பு

**கருத்துரை:**
**பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம்** (யாழ். பல்கலைக்கழகம்)
**யதீந்திரா** (அரசியல் ஆய்வாளர்)
**அருட்திரு அகஸ்டின் நவரெட்ணம்** (கிழக்கு பல்கலைக்கழகம்)

"தேர்தலை எதிர்கொள்வது எப்படி? ஏன்?"
என்ற தலைப்பில்
அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கருத்துரைப்பார்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"மக்கள் மனு"
வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக குழு

# சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தவறினால் நேரக்கூடிய பாரதூரமான விளைவுகள்!



கலாநிதி ஜெகான் பெரேரா

வரலாற்றைத் திரும்பிப்பார்த்து காலனித்துவ யுகத்தை நினைவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகப்போர்கள் மற்றும் உள்நாட்டு மோதல்களின் பாதகமான தாக்கங்களுக்கு மத்தியிலும் இலங்கை அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் செயபாடுகளை இடையூறின்றி உறுதிப்படுத்தும் அதன் ஜனநாயக விழுமியத்தை உறுதியாகப் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் இந்த முறைமையை நிலைபேறாகப் பேணுவதற்கான வழிவகைகளை ஆராய்வது அவர்களுக்கு பயனுடையதாக இருக்கும் என்று கூறினார்.

இதற்கு மாறாக, இலங்கையின் அயல்நாடுகள் எதிர்க்கட்சிகளை முற்றுகைக்குள்ளாக்கி, வங்கிக்கணக்குகளை முடக்கி, அவற்றின் தலைவர்களைச் சிறையிலடைத்து அவர்கள் தேர்தல்களில் போட்டியிடமுடியாதவாறு தடுத்துவருகின்றன. இந்த விடயங்களை குறிப்பிடுவதில் மிகவும் இராஜதந்திரத்துடன் நடந்துகொண்டார்.

மறுபுறத்தில், இலங்கையில் கருத்துக் கணிப்புக ளின் முடிவுகளை நம்புவதாக இருந்தால் அரசாங்கத்தின் மக்கள் ஆதரவு தனி இலக்கத்துக்கு ஒற்றை இலக்கத்துக்கு வீழ்ச்சிகண்டிருக்கும் அதேவேளை எதிர்க்கட்சிகளின் ஆதரவு அதிகரித்து வருகிறது. துடிப்பாக செயபடும் ஒரு ஜனநாயகத்தின் மிகவும் தெளிவாகத் தெரியக்கூடியதும் உண்மையானதுமான சின்னம் அதன் அரசியல் சமுதாயத்துக்கு சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களில் இருக்கக்கூடிய பற்றுறுதியேயாகும்.

அரசிலமைப்பின் பிரகாரம் குறைந்தபட்சம் இவ்வருடம் அக்டோபருக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டியிருக்கும் நிலையில் இலங்கையில் தேர்தல்கள் பற்றிய எதிர்பார்ப்புகள் அதிகரித்திருக்கின்றன. இது விடயத்தில் இலங்கையின் அனுபவம் அண்மைய தசாப்தங்களில் பலதரப்பட்டதாக இருந்தாலும் பொதுவில் முன்னேற்றமான போக்கு இருந்தது.

வடமேல் மாகாணத்தில் 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற வன்முறையுடன் கூடிய மாகாணசபை தேர்தல், 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் துப்பாக்கி முனையில் விடுதலை புலிகள் திணித்த பகிஷ்கரிப்பு ஆகியவை விதிவிலக்குகள். அந்த பகிஷ்கரிப்பு ரணில் விக்கிரமசிங்கவின் உறுதியான வெற்றியை தட்டிப்பறித்தது. அதற்கு பிறகு கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் தேர்தல்கள் பெருமளவுக்கு வன்முறை இல்லாதவையாக இருந்து வந்திருக்கின்றன.

ஆனால், இலங்கையின் தேர்தல்கள் இரு அம்சங்களில் முன்னேற்றம் காணவேண்டிய தேவை இருக்கிறது. அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கங்களினால் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை தடுக்கவேண்டிய தேவையே முதலாவது அம்சமாகும். அரசாங்கங்கள் அரச இயந்திரத்தை துஷ்பிரயோகம் செய்து பக்கச்சார்பான அரசியல் பிரசாரங்களுக்கும் வாக்காளர்களை தங்கள் பக்கம் இழுப்பதற்காக பொருளாதார வளங்களை வழங்குவதற்கும் அதை பயன்படுத்துவது நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது.

தேர்தல் செயன்முறைகளில் உள்ள இந்த குறைபாடுகளை தேர்தல் கண்காணிப்பாளர்கள் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்கள். ஆனால், அரசாங்க அதிகாரத்தை கையில் வைத்திருப்போர் அனுபவித்த உயர்ந்தளவு தண்டனையின்மை காரணமாக இந்த குறைபாடுகளை அடுத்து வந்த தேர்தல்களில் கண்காணிப்பாளர்களின்ல் தடுக்கக்கூடியதாக இருக்கவில்லை.

## முன்கூட்டிய தேர்தல்கள்

தேர்தல்கள் கிரமமாக நடத்தப்படுவதை பல்வேறு தந்திரங்களைப் பயன்படுத்தி தடுப்பது இரண்டாவது அம்சமாகும். உதாரணமாக, 1972 ஆம் ஆண்டில் பதவியில் இருந்த அரசாங்கம் அதன் ஐந்து வருடப் பதவிக்காலத்தில் இரு வருடங்கள் ஏற்கெனவே முடிந்து விட்டபோதிலும், புதிய அரசியலமைப்பை கொண்டுவந்து பதவிக்காலத்தை மேலும் இரு வருடங்களினால் நீடித்தது.

1982 ஆம் ஆண்டில் பதவியில் இருந்த அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்கு பதிலாக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி பாராளுமன்ற தேர்தலை ஆறு வருடங்களுக்கு ஒத்திவைத்தது.

மிகவும் அண்மையில் 2018 ஆம் ஆண்டில் அரசாங்கம் மாகாணசபை தேர்தல் முறையால் மாற்றத்தைச் செய்வதற்கான செயறன்முறைகளை தொடங்கி இறுதியில் மாகாணசபை முறை செயற்படாத நிலையை உருவாக்கியது.

தற்போதைய அரசாங்கம் 2023 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக திறைசேரியிடம் பணம் இல்லை என்று கூறி உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைக்கும் தீர்மானத்தை எடுத்தது. இதனால் இவ்வருடம் அக்டோபரில் நடத்தப்பட வேண்டியிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கும் ஏதாவது ஒரு விதத்தில் அதே கதி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் தோன்றியிருக்கிறது.

ஆனால், அவ்வாறு எதுவும் நடந்துவிடாது என்று எதிரணி அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூகத்துக்கும் உறுதியளிப்பதில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் பல அமைச்சர்களும் தேர்தல் ஆணையாளரும் கடுமையாக கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆனால் கருத்துக்கணிப்புகளில் மக்கள் ஆதரவில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும் அரசாங்கம் தேர்தல்களை குழப்பியடிக்க வழிவகைகளை நாடுவதற்கு தூண்டப்படக்கூடும் என்ற சந்தேகம் தொடரவே செய்கிறது.

இத்தகைய பின்புலத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டம் பூரணப்படுத்தப்படும் வரை தேர்தல் எதுவும் நடத்தப்படாது என்ற ஜனாதிபதியின் அண்மைய அறிவிப்பு ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஊகங்களுக்கு வழிவகுத்திருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும் வரை எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க அமைச்சரவைக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அறிவித்ததாக பல பத்திரிகைகளில் ஒரேமாதிரியான செய்தி வெளியாகியிருக்கிறது.



சர்வதேச நாணய நிதியத்துடன் சேர்ந்து முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு செயன்முறை பொருளாதார ரீதியில் நாட்டுக்கு முக்கியமானது என்பதால் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கே முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் ஜூலை இறுதி வரை நடைமுறையில் இருக்கும் என்பதால் அதுவரைக்கும் எந்த தேர்தலும் நடத்தப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் செயன்முறைக்கு பிறகே அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை நடத்தும் காலம் வருவதால் அந்த தேர்தல் நாணய நிதியத்தின் திட்டத்துக்கு இடையூறாக அமையாது என்று அவர் கூறியிருக்கிறார்.

வெளியான செய்திகளின் பிரகாரம் நோக்கும்போது முதலில் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகுமாறு அமைச்சரவைக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். அரசாங்கத்திற்குள் இருக்கும் ஒரு பிரிவினர் வலியுறுத்துவது போன்று பாராளுமன்ற தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படப்போவதில்லை என்பதை இது உணர்த்துகிறது. ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாவதற்கு முன்னதாக சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதே சவாலாக இருக்கப் போகிறது.

## ஆட்சிமுறைச் சீர்திருத்தங்கள்

சர்வதேச நாணய நிதிய உதவித்திட்ட நடைமுறைப்படுத்தலில் இரு அம்சங்கள் இருக்கின்றன. பெரும்பாக பொருளாதார (Macro - economic targets) இலக்குகளை அடைவது ஒன்று. இது விடயத்தில் இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினரின் பாராட்டுக்கள் அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கிறது.

இலங்கையினால் நடைமுறைப்படுத்தப்படும் மறுசீரமைப்பு திட்டத்தினால் அடையப்பெற்ற விளைவுகள் பாராட்டத்தக்க பயன்களைக் கொண்டு வந்திருக்கின்றன என்றும் பணவீக்கம் துரிதமாகக் குறைந்தமை, வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு பலப்படுத்தப்பட்டமை, நிதி முறைமையில் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான ஆரம்ப அறிகுறிகள் ஆகியவை இந்த பயன்களில் அடங்கும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் புரூவர் கூறியிருக்கிறார்.

குறிப்பிடத்தக்க நிதித்துறைச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இலங்கையின் பொதுநிதி பலமடைந்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால், சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் இரண்டாவது அம்சத்தைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் செயற்பாடு நன்றாக அமையவில்லை. அதாவது ஆட்சிமுறைப் பலவீனங்கள் மற்றும் ஊழல் முறைகேடுகளை உறுதியான முறையில் கையாளவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியது. ஒரு குறிப்பிட்ட பிரிவினர் அல்ல நாட்டில் உள்ள சகலருக்கும் பயன்தரக்கூடிய உறுதியானதும் சகல தரப்புகளையும் அரவணைக்கின்றதுமான வளர்ச்சியையும் நிலைபேறான மீட்சியையும் நோக்கிய பாதையொன்றில் பொருளாதாரத்தை பயணம் செய்ய வைப்பதற்கு ஆட்சிமுறை பலவீனங்களையும் ஊழல் முறைகேடுகளையும் கையாளுவது மிகவும் முக்கியம் என்று சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தொடர்பிலான கடப்பாடுகளில் 33 சதவீதத்தை 2024 பெப்ரவரி இறுதியளவில் அரசாங்கம் நிறைவேற்றத் தவறிவிட்டது என்ற வெறைற் றிசேர்ச் (Verite Research) அமைப்பின் கண்டுபிடிப்பு குழப்பத்தை தருவதாக இருக்கிறது. நிறைவேற்றப்படாத கடப்பாடுகள் என்று வகைப்படுத்தப்பட்டவற்றில் பெரும்பாலானவை ஆட்சிமுறையை மேம்படுத்துவதுடன் தொடர்புடையவையாகும். தகவல்களை வெளியிடுதல் ( வெளிப்படைத்தன்மை), ஆட்சிமுறையை மேம்படுத்துவதற்கு தேவையான சட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவை தொடர்பிலான கடப்பாடுகள் இதில் அடங்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் பிரதான பகுதிகள் அரச சொத்துக்களை ஒழுங்கமைப்பதுடனும் தனியார்மயப்படுத்துவதுடனும் தொடர்புடையதாகும். நட்டத்தில் இயங்கும் பல அரச நிறுவனங்கள் காணி, கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் அவை கொண்டிருக்கும் நிதி வைப்புக்களைப் பொறுத்தவரை மிகவும் வளமானவை என்பதால் இது விடயத்தில் ஒளிவுமறைவற்ற தன்மை உச்சபட்சமாக இருக்கவேண்டியது இன்றியமையாதது என்பதை சொல்ல வேண்டியதில்லை.

இந்த அரச சொத்துக்கள் குறைந்த விலைகளுக்கு விற்பனை செய்யப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. இதுவே வெளிநாட்டு நலன்களினதும் அதிகாரத்தில் இருப்பவர்களின் குடும்பத்தவர்கள் மற்றும் நண்பர்களின் நடைமுறையாக இருந்து வந்திருப்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு போட்டி அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறவேண்டியதும் வெளிப்படைத்தன்மை இருக்கவேண்டியதும் அவசியமாகும்.

ஏற்றுக் கொள்ளமுடியாதவையும் நெறிமுறையற்றவையுமான நடைமுறைகளே பொருளாதார வீழ்ச்சியைக் கொண்டுவந்து மக்களை சொல்லொணா இடர்பாடுகளுக்குள் சிக்கவைத்தன.

வெளிப்படைத்தன்மை அற்றவையாகவும் தேசிய நலன்களுக்கு பாதகமானவையாகவும் அமைந்திருப்பதாகக் கண்டறியப்படக்கூடிய எந்தவொரு உடன்பாட்டையும் செய்பாடுகளையும் ரத்துச் செய்து விடப்போவதாக எதிர்க்கட்சிகள் விடுத்திருக்கும் எச்சரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவையாகும்.

பெரும்பாக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகளுடன் சேர்த்து ஆட்சிமுறையை சீராக்கும் முன்மொழிவுகளும் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டியது சர்வதேச நாணய நிதியம், எதிரணிக் கட்சிகள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றின் பொறுப்பாகும். ●